# THE LAST JUDGMENT.

**The object of this book is to represent the second coming of Christ.**

Vedanayaga Shastriar The Evangelical Poet has composed this in plain verses to the tune in the fable of Sithraputtran that even the young children may sing them easily illustrating it according to the tenor of Scriptures.

Math 25 : 41. Rev. 20 : 10.

Composed by

**VENERABLE SASTRIAR**

in 1844 Tanjore.

# கடைசி நியாயத்தீர்ப்பு.

இது கிறிஸ்துவின் பிந்தின வருகையை
வெளிப்படுத்துவது.

*சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார் வேதாட்சரத்தின்படி விஸ்தரித்து சித்திர புத்திரன் கதைச் சந்தமாகச் சிறு பிள்ளைகளும் பாடும் படிக்குத் தெளிவான பாடலாயுண்டாக்கினர்கள்.*

மத். 25 : 41. வெளி. 20 : 10.

கிறிஸ்தாப்தம் 1844 வருஷம்
தஞ்சைமாநகர் சுவிசேட கவிராய
வேதநாயக சாஸ்திரியாரால்
பாடப்பட்டது.

Vētanayaka cāstri

Printed and published by the humble endeavours of
Mr. E. VETHABOTHAGAM
thanking the generous gentries for their kind help and sympathetic co-operation.



Ven'ble. VEDANAYAGA SASTRIAR.



VEN'BLE. ELIZAH SASTRIAR
second son of
VEN'BLE. ṢASTRIAR
who completed many of his works and who first started printing his works.



## THE EVANGELICAL HALL.

This very useful openhall, on many occasions used for public preachings is under immediate repairs. Any amount towards its upkeep and repairs will be thankfully received and acknowledged.

**E. VETHABOTHAGAM,**
Grandson of Ven. Sastriar.



# E. VETHABOTHAGAM,

Grandson of Ven. Sastriar.

## A review of the volumes to be printed with a rough estimate for printing 500 copies in wrapper binding:—

1. Vannasamudram—(வண்ணசமுத்திரம்) Rs. 60.

A description of Noah's Ark, the flood. A dramatic presentation of the wailings and misery of the stiff-necked people who never repented, sung in rare, beautiful, inimitable verses and tunes.

2. Bethlaham-kuravanji—(பெத்லகேம் குறவஞ்சி) Rs. 150.

The preaching of the Gospel. The preachers, conversion, Christians, all displayed in sweet style of rare poetry, well appreciated by many for its excellent diction of the preaching of the Gospel in tunes of splendid vivacity. Ready for Print As. 8.

3. Bala Sarithiram—(பால சரித்ம்) Rs. 40.

About the birth of Christ. All the ancedotes connected with the august occurrence, John the Baptist, his preaching, all incidental stories, versed in beautiful sweet music. Printed 3 & 6 two books ready for sale As. 8

4. Aranathinthatham—(ஆரணதிந்தம்) Rs. 100.

The whole of the scriptures from the beginning to the end depicted in excellent tunes very much admired by the public. Impressive conversations; appealing ideas, very fine weaving of religious topics, in the soul stirring spiritual style of (உன்னதப் பாட்டு) the song of Solomon the Wisest.

5. Gnananondi—(ஞானநொண்டி) Rs. 40.

All men are sinners, imperfect one way or other. Imperfect nature after the fall, Man regaining his perfect nature through Christ, a dramatic depiction much admired, very useful for evangelical work.

6. Kadaisi-niyayathirpu—(கடைசி நாயத்தீர்ப்பு) Rs. 80.

The last judgment much used in Evangelical work, impressing the awe of judgment, the severity of punishment in very pleasing easy tunes lovingly grasped by even youngsters. **Printed 3 & 6 two books ready for sale As. 8.**

7. All the following volumes depict the scriptures.

The Gospels, the epistles, prescribed for Sundays and Holy festivals, sung in metres, much wanted by Tamil Christians, Virutham—(விருத்தம்), Asiriyappa—(ஆசிரியப்பா), Kalippa—(கலிப்பா), Venba—(வெண்பா) etc. The scripture stories, miracles, parables etc., may be easily borne in mind and used in preaching.

(i) Suvishedagnanam—(சுவிசேடஞானம்) Rs. 25.
(ii) Munnurai—(முன்னுரை) ,, 15.
(iii) Vedavinavidai—(வேதவினவிடை) ,, 15.
(iv) Suvishedapuranam—(சுவிசேடபுராணம்) ,, 260.

including Thiyanapulambal Rs. 130—(தியானப்புலம்பல்) describing in best tunes, the passion of Christ, the resurrection of Christ.

8. Paraparakanni—(பராபரக்கண்ணி) Rs. 90.

Much used in prayers, devotional, like Jebamalai, Viruthavenbavinangal—(விருத்தவெண்பாவினங்கள்).

9. Gnanapathakeerthanam-(ஞானப்பதக் கீர்த்தனம்) Rs.350.

About 500 lyrics, sung in excellent Thiagaraja's esteemed tunes, Maharatti, Hundustani and other tunes, as used in the Tanjore Palace and outside, very much admired and devotionally sung on devotional sacred occasions by sincere Tamil Christians of very good position and ability.

The total sum is about Rs. 1,000 and odd only.

# THE LAST JUDGMENT.

## PREFACE.

THE object of this Book is to represent the second coming of Chirist.

When He shall come with all holy angels with Him, He shall sit upon the throne of His glory and before His presence shall be gathered all nations. (Matt: 25 ; 31. 32;) then the two books shall be opened. (Rev: 20, 12.) Moses to whom the law was given shall then begin to accuse them of having violated the ten Commandments. (John: 5, 45.) Christ shall administer Judgment by rewarding the rightious with life eternal, and by punishing the wicked in hell with the devils they had worshipped (Mat: 25, 41. Rev: 20, 10.)

Vedanayaga shastriar the Evangelical Poet has Composed in plain verses to the tune in the fable of Sittraputtran (சித்திரபுத்திரன் கதை) that even the young Children may sing them easily illustrating it according to the tenor of Scriptures.

This is a refutation against the numberless blasphemous books which the Sadur Veda Sittanties at Madras printed and published at that time to injure God and His holy religion and it is also a means of warning them to repent and turn from their abominable idols to salvation.

(Ezekiel : 24 ; 15.)

# கடைசி நியாயத்தீர்ப்பு.

## முகவுரை.

கடைசி நியாயத்தீர்ப்பென்று பெயரிடப்பட்ட இப்புஸ்தகம் கிறிஸ்துவின் பிந்தின வருகையை வெளிப்படுத்துகிறது.

அவர் தமது சகல பரிசுத்த தூதர்களோடுங் கூட வந்து தமது மகிமையி ஞசனத்தி லுட்கார்ந் திருக்கும்போது, எல்லாச் சாதிகளும் அவர் சமுகத்திற் கூட்டப்படுவார்கள். (மத். 25. 31-32.) அப்போது இரண்டு புஸ்தகங்கள் திறக்கப்படும். (வெளி: 20: 12.) நியாயப்பிரமாணத்தைப் பெற்ற மோசே பத்துக்கற்பனை பிரகாரம் அவர்களைக் குற்றஞ் சாட்டத் தொடங்குவான். (யோவான் 5:45.) கிறிஸ்து நியாயந்தீர்த்து நீதிமான்களை நித்திய ஜீவனிலே சேர்த்து, ஆகாதவர்களை அவர்கள் வணங்கின பிசாசுக்களோடே கூட நரகத்திலே ஆக்கினை யிடுவார். (மத். 25: 41; வெளி: 20: 10.)

இவற்றைச் சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார் வேதாட்சரத்தின்படி விஸ்தரித்து சித்திர புத்திரன் கதைச் சந்தமாகச் சிறுபிள்ளைகளும் பாடும்படிக்குத் தெளிவான பாடலா யுண்டாக்கினர்.

இதே இக்காலத்திலே பராபரனையு மவருடைய வேதத்தையும் நிந்தித்து அச்சடித் தனுப்புகிற சென்னப்பட்டணத்து சதுர்வேத சித்தாந்திகளுடைய திரளான தேவதூஷணப் புஸ்தகங்களுக் கெதிருத்தரவாகவும், அவர்கள் தங்கள் நரகலான தேவர்களை (எசேக். 14: 5.) விட்டு மனந்திரும்பி இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களை யெச்சரிக்கிற சாட்சியாகவு மிருக்கிறது.

* கிறிஸ்தாப்தம் 1844.

தஞ்சாவூர்.

# பொருள் அட்டவணை.


1. ஆரம்பம்.
2. பத்துக் கற்பனை விஸ்தரிப்பு.
3. முதலாம் கற்பனை—*விக்கிரகச் சிறப்பு, பலவழி விக்கிரக ஸ்தலங்கள், மாதாந்தரப் பண்டிகைகள், விக்கிரக பத்தி, பலவழிப் பூசைகள், பொய்க் குருக்கள் வியாபாரம் நாட்பார்த்தல், சுய புண்ணியம்.*
4. இரண்டாம் கற்பனை—*தேவலட்சணம், ஆணையிடுதல், கோவில் வீண்ஜெபம், சந்தேகம்.*
5. மூன்றாம் கற்பனை—*ஓய்வு நாள் மாதிரி, அலங்காரம் சகாயம் ஓய்வுநாட் கூலி.*
6. நான்காம் கற்பனை—*பெற்றோரை யறிதல், பராமரிப்பு பலன் பெற்றோர் முறை.*
7. ஐந்தாம் கற்பனை—*ஆத்துமக்கெடுதி. சரீரக்கெடுதி வியாதி தழும்பு, அவதிப்பலி, கொடுமை வகைமோசம்.*
8. ஆறாம் கற்பனை—*விபசாரம் அசுத்தம், வேசியின் பலன், அக்கியான விக்கிரக துன்மார்க்கம்.*
9. ஏழாம் கற்பனை—*களவுக்குக் காரணம் திருட்டு வியாபாரம தொழிலாளிகள் சூது.*
10. எட்டாம் கற்பனை—*வீண் சந்தேகம், நியாயத் தீர்ப்பு, பரியாசக் கோரணிகள், பொய் வாக்குத்தத்தம் பின் புறணி, அஞ்ஞான தேவதைகளின் பொய்.*
11. ஒன்பதாம் கற்பனை—*பிறன் வீடு, அஞ்ஞான தேவர்கள் நடக்கை, விக்கிரக இருப்பு.*
12. பத்தாம் கற்பனை—*அவாவு, பிறர் பொருளிச்சித்தல்.*
13. முத்தரித்த புஸ்தகத்தை தெய்வாட்டுக்குட்டி வாங்கின சுப செய்தி.
14. அவிசுவாசிகள்.
15. சாட்சிகள்.
16. முடிவுரை—*குற்றஞ்சாட்டப் பிசாசுக் கதிகாரமில்லை.*

# கடைசி ஞாயத்தீர்ப்பு.

## ஆரம்பம்.

### விருத்தம்.

கடைசியிருந்த காலங் காரணத்திருக் குமாரன்
புடவியில் வந்திரண்டு புஸ்தகங்களின் பிரகாரம்
திடமுடன் கணக்கு கேட்டு சீவியர் மரித்தோருக்கும்
அடவுடன் பலனைத்தந்தா னகிலமு முடிந்ததன்றே.

1. தன் னிகரில்லாத சருவேசன்
சருவசங்கார காலத்தினிலே
உன்னத பத்திராசனத்தில் வீற்றிருக்கு
மொரு திருமைந்த னுடனுரைக்கலுற்ருர்.

2. வானங்கள் மடமடப்போ டொழிந்து
வாகன பூதியங்கள் வெந்துருகி
ஆன பொருளெல்லா நீறுநீறு
யழிவுறு மிருந்த காலத்திலே. (2 பேதுரு 3: 11.)

3. நடுத்தீர்க்கிற நாள் வந்ததென்று
நாயனுர் ஞாயாதிபதியாக
அடுத்து வலதுபாரி சத்திருக்கு
மன்பான மைந்தனுடனருளிச் செய்வார்.

4. தேவ புத்திரனை யுபசரித்து
திருநடுத் தீர்வையிட வேணுமென்ருர்
பாவிகளை நரகத்திலே விடுத்துப்
பத்தருக்குப் பரகதி நல்குமென்ருர்.

5. தந்தையார் சொற்படி மேகத்தின் மீதே
சம்மன செல்லாந் தொழவெழுந்தருளி
மைந்தனுராா காயவீதி வந்து
மகிமையினு சனத்தி லுளுக்கார்ந்தார். (மத். 25: 31.)

6. பரமண்டலங்களிலார்ப் பரிப்பாய்ப்
பரிசுத்த தூதரெல்லாங் கூடிவந்தார்
ஒரு பிரதான தூதனினுடைய
வொலி முழக்கான சத்தமுண்டானதே. (1 தெச. 4: 14)

7. வலுவாய்த் தொனிக்கு மெக்காளத்தோடே
வல்லவர் தந்தூதார்களை யனுப்பினுர்
நலமாக தெரிந்து கொண்டவர்களை
நாற்காற்றுத் திசைநின்று கூட்டிச்சேர்த்தார். (மத். 24: 31)

8. வானத்தினொரு முனை துவக்கியதின்
மறுமுனைமட்டு நாற்றிசை யினின்று
சேனைத் திரளாகத் தேவதூதர்
தெரிந்துகொண்டவர்களைக் கூட்டிச் சேர்த்தார்.

9. சாதிகளடங்கலுங் கூட்டப்பட்டார்
தனித்தனித் தாடுகள் கிடாய்களையும்
வேதனுர் மேய்ப்பனைப் போற்பிரித்து
வேறு வேருகவே நிறுத்தலுற்ருர். (மத். 25 : 32)

10. ஆடுகளைத் தமது வலமாக
ஆட்டுக் கிடாய்களையோ இடமாக
கூடிவர நிறுத்திக்கொண்டு கோமான்
கொலுவிருந்தார் வெள்ளை யாசனத்திலே.

11. பத்திராசனத் திருந்தவருடைய
பார்வையால் பாருலகும் வானமுமே
தத்தளிப்பாய கன்ருேடியதுகள்
தங்களுக் கிடங்கிடையாதே போனதே.

12. மரித்த சிறியோரும், பெரியோரும்
வல்லபராபரன் முன்வந்து நின்றார்
விரித்தே பொஸ்தகங்கள் திறக்கப்பட்டு
வேறோர் சீவாகமமும் திறவுண்டதே தானி. (7: 9-11.
அறி. 20: 12.)

13. பொஸ்தகத் தெழுதப்பட்ட பிரகாரம்
பொன்றினோர் தங்கிரியைகளின்படியே
ஒத்து ஞாயந்தீர்க்கப்பட்டார்கள்
ஒலிகடற்றன் மரித்தோரைத் தந்ததே.

14. மரணமும் பாதாளமும் தங்களின்
மரித்தோர் யாவரையும் தந்ததுவே
அருகின அவரவர் கிரியைகளுக்
கானபடி ஞாயந்தீர்க்கப்பட்டார்.

15. சீவபொஸ்தகத் தெழுதப்படானேல்
தேவாகமத்திற் காணப்படானேல்
தாவியெரியு மக்கினிக்கடலிலே
தள்ளுண்டான் மரணமும் தள்ளுண்டதே.

16. மகத்துவத்துக் கெல்லாமேலான
மனுடகுமாரனார் ஞாயத்தீர்ப்பைப்
பகுத்துக் கொண்டாடுஞ் சாட்சிகளாக
பரிசுத்தப்போஸ்தலரை யழைக்கச் சொன்னார்.

17. பனிரண்டி சரவேற் கோத்திரங்களை
முனைகொண்டு ஞாயந் தீர்ப்பவராக
பனிரண்டாசனங்கள் வைக்கப்பட்டுப்
பனிரண்டப் போஸ்தலருமுளுக்கார்ந்தார். (மத். 19 : 28)

18. பரமபத்திராசனத்தைச் சூழ்கவிரு
பத்திருலாசனங்கள் வைத்திருந்தது
தூய வெண்வஸ்திரங்கள் தரிக்கப்பட்டு
தூயபொற் கிரீடஞ் சூட்டப்பட்ட. (அறி. 4 : 4.)

19. இருபத்துநாலு மூப்பர்களிருந்தா
ரிருபத்து நாலாசனங்கள் மீதே
சுருபத்து முற்புறம் பிற்புறம் கண்களால்
சூழ்ந்தாற் சீவன்களுஞ் சுற்றிநின்றதே.

20. ஆசனத்திலே யிருந்து மின்னல்களும்
அதிருங்கு முறல்களுஞ் சத்தங்களு
மரசினத்தின் வசனங்களும் புறப்பட்டு
மறைமுனிவனை வரவழையு மென்றார்.

21. தூதர்போய்ச் சொன்னவுடனே
தூங்கிக்கிடந்த மோசேயு மெழுந்து
வேதப்பிரமாணத்தை யெடுத்துக் கொண்டு
விரைந்து விரைந்து நடந்தோடிவந்தான்.

22. கற்பனைப் பொஸ்தகத்தைத் தூக்கிக்கொண்டு
கடுகிமோசேயும் விரைந்தோடி வந்தான்
சற்பிரமாணங்களைப் பிடித்துக் கொண்டு
தாண்டி மோசேயும் விழுந்தோடிவந்தான்,

23. ஞாயப்பிரமாணத்தைக் கையிலேந்தி
நம்பின மோசேயும் வந்துநின்றான்
தீயைப்போலெரிந் திருகண்கள் சிவந்து
திக்குவாய் முனிவனும் வந்துநின்றான். (யோ. 5 : 45)

24. முற்று மிசரவேற் சாதிகளை
முழுதுமனக்கடினப் பட்டவர்களை
குற்றஞ் சுமத்துதற்கு மோசேயுமே
கோபத்தோடே எழுந்து வந்துநின்றான்,

25. பத்திரம் பத்திரமென்று றுக்கிக்கொண்டு
பார்த்தவரெல்லா நடுங்கி பயந்தோட
சித்திரக் குமாரனார் சமுகத்திலே
சீனைமலைக்கிழவன் வந்து நின்றான்.

26. வந்துமுனிவனுந் தாள் பணிந்து
மனுடகுமாரனை வணங்கி நின்றான்
மூந்தச் சீனாமலையிற் சென்றதிரு
முகத்தைக் கண்டர்ச்சித்துப் பணிந்துநின்றான்.
(2 மோ. 33 : 14. 34 : 8.)

27. ஆசாரக் காரனைப் புன்னகைகொண்
டப்பாலோராசனத்தி லிருக்கச் சொன்னார்
மூசாநபி யென்று பேர் கொண்டவனை
முன்னாக வந்திருக்கக் கட்டளையிட்டார்.

28. அருமைத் திருவாக்கை யெண்ணாத
ஆகாத பாவிகளை யாக்கினையிடத்
தருமக்கணக்கையுந் தருமமில்லாச்
சண்டாளர் கணக்கையும் பாருமென்றார்.

29. பத்துக்கற்பனைப் பிரமாணமென்ற
பட்டோலை வாசகத்தைக் கையிலெடுத்து
சித்திரக் குமாரனார் கணக்கைவிட்டு
சீனாமலையன் வாசிக்கச் செய்தான்.

30. இருபத்துநான்கு மூப்பர்களும்
எண்ணிறந்தகோடி தூதருங் கேட்க
தருமக்கிறிஸ்து மகாராசவுட
சன்னதிமுன் னின்றுகுற்றஞ் சாட்டலுற்றான்.

---

## 1. கற்பனை.

### விக்கிரகாராதனை.

1. ஐயா கிறிஸ்துமகாராசாவே யிவன்
அக்கிரமக்காரர்களில் முந்தினவன்
மெய்யான தேவனை வணங்காமல்
விக்கிரகத்தைத் தொழுதுகொண்டபாவி. (2 மோசே. 20:3-4)

2. அழியாப் பரபிரமத்தின் மகிமைதனை
யழியு மனுடனுக் கொப்பாக்கினவன்
ஒழியாப் பராபரனின் சாயலென்றே
யுருப சுரூபங்களை யுண்டாக்கினவன். (எசா. 41 : 7.)

3. செத்தமனுடர் மேனாட்டம் வைத்து
தீய பிசாசுகளைச் சேவித்தவன்
பத்தியற்று நாற்காற் சீவன்களை
பறவைகளூர்வனவைப் பண்செய்தவன். (2 ரோமர். 1 : 23.)

4. சிங்கம் புலிகளைப் பன்றிகளைத்
தெண்ணீரிலாமைகளை மச்சங்களைக்
கங்கங் கழுகுமயிற் சேவல்களைக்
கதிதரத்தொழுது கண்கெட்ட கபோதி

5. செத்த மனுடரைத் தெய்வமென்பான்
தீமண்ணைப் பூதியங்களைச் சேவிப்பான்
பூத்தமண்ணைச் சுங்கத்தைப் பூதிப்பையைப்
பொருளென்று கண்ணீருண்டு போனபாவி.

6. கல்லையுஞ் செம்பையுங் கட்டைகளையும்
களிமண்ணையுங் கடவுளென்ற குசவன்
புல்லருந்துமாட்டின் சாணியொரு
பொருளென்றுருட்டிவைத்து பூசித்தவன், (எசா. 40:18-12.
ஓசேயா. 4 : 12)

7. வெண்கலந்திராப் பஞ்சலோகங்களை
வெள்ளியையும் பொன்னையும் விடமாட்டான்
பெண்குறியோ டாண்குறியை லிங்கமென்று
பேணித்தொழுது கண்கெட்ட குருடன். (4சா. 46 : 5-8.)

8. சன்னனுருக்கிவிட்ட செம்புருவங்கள்
கருமானடித்து வைத்த காரிரும்புகள்
பொன்னாற் வெள்ளியினாற் றட்டானிடும்
பொற்சுரூபங்கள் வெள்ளிச் சுரூபங்கள் (எசா. 2 : 8
ஓசே. 13 : 2.)

9. தச்சன் அடித்துவைத்த மரக்கட்டைகள் சிற்பா
சாரியடித்துவைத்த கற்சிலைகள்
அச்சக் குசவன்கை மண்பாண்டங்க
ளடங்கலுக் தெய்வமென்ற வாகாத்தியன். (3. மோசே. 26:1.
எரே. 14 : 13.)

---

## விக்கிரகச் சிறப்பு.

---

10. அக்கியாணிகளுடைய விக்கிரகங்க
ளந்தகாரத்தின் மக்கள் விக்கிரகங்கள்
முக்கிய தலங்களென்ற விக்கிரகங்கள்
மும்மூக்கியென்று சொன்ன விக்கிரகங்கள்.

11. பற்பல விலங்குகளாம் விக்கிரகங்கள்
பறவைகளூர் வனவாம் விக்கிரகங்கள்
அற்பக்குலாமர் செய்த விக்கிரகங்க
ளக்கிரமலீலையான விக்கிரகங்கள்.

12. வாயிருந்தும் பேசாத விக்கிரகங்கள்
மனுடர் கைக்கிரியையான விக்கிரகங்கள்
தீயதொழிலாளிகளின் விக்கிரகங்கள்
சிலையுமரமுமான விக்கிரகங்கள். (சங். 115 : 4-8.
135 : 15-18)

13. கண்ணிருந்தும் காணாத விக்கிரகங்கள்
காதிருந்துங் கேளாத விக்கிரகங்கள்
பெண்ணுரு வாணுருவான விக்கிரகங்கள்
பேச்சது மூச்சது மற்ற விக்கிரகங்கள்.

14. கால்களிருந்தும் நடவாத விக்கிரகங்கள்
கைகளிருந்தும் தடவா விக்கிரகங்கள்
வால்களு மருப்புமுள்ள விக்கிரகங்கள்
மாடுங் குரங்குமான விக்கிரகங்கள்.

15. தொண்டையிற் சத்தமில்லாத விக்கிரகங்கள்
தூஷணநாமமுள்ள விக்கிரகங்கள்
பெண்டுகளின் சாயலான விக்கிரகங்கள்
பேயும் பிசாசுமான விக்கிரகங்கள்.

16. ஈயுங் கொசுகும் மொய்க்கும் விக்கிரங்கள்
வௌலியெருவிட்டிருக்கும் விக்கிரகங்கள்
பாயும்வல்லூறும் பருந்தும் காகமும்
பறந்திருந் தெச்சமிடும் விக்கிரங்கள்.

17. வல்லடைந் தொட்டிக்கொள்ளும் விக்கிரகங்கள்
வானரங் குதிகொண்டாடும் விக்கிரகங்கள்
தவ்வியே பூனைகணைக்கும் விக்கிரகங்கள்
சாமியென்று பூசித்த சடையாண்டி. (5 மோசே. 7 : 5.)

---

## பலவழி விக்கிரகங்கள்.

---

18. தீயிற்குதித்தவளின் சாயல்களைச்
சிலையிலடித்துவைத்த பெண்டுகளை
நாயின்மேலேறிவரும் வயிரவனை
நஞ்சுதின்று நாணுகொண்ட முண்டைகளை.

19. காத்தான் கருப்பன் சக்கிலியனை
கால்கை வெட்டுண்ட மதுரைவீரனை
சாத்தாவை ஐயனாரை களிமண்ணாற்
றட்டியே சுட்டுவைத்த அசுவங்களை.

20. தொட்டியசின்னானைப் பொம்மக்காளை
துஷ்டரண வீரபத்திரனை
கொட்டவனுமந்தனைக் கோவிந்தனை
குறத்தியைக் கண்டெடுத்த கோமாளியை.

21. படையினிற் பட்டிறந்த வீரர்களை
பாழுங்கசத்தில் விழுந்தொழிந்தவனை
இடையர் குலங்கெடுத்த கிருட்டினனை
யேகரிவீரியென்ற மூதேவியை.

22. மாரிவராகியை மாகாளியை
வள்ளியைப் பெண்டெடுத்த மாயாண்டியை
சூரியகோரியைத் திரிசூலியை
துற்கைப் பிடாரியைத் தூத்தேரியை.

23. கடம்பனை யிடும்பனை கரிமுகனைக்
காளியைக் கூளியைக் காட்டேரியை
கொடும்பசை மாடனுக்கு பீடமிட்டுக்
கூளிப்பிசாசுகளைக் கும்பிட்டவன்.

24. ஆகாசவாணியென்று வானத்தையும்
அக்கினி பகவானென்றக்கினியையும்
வாகானநீர் கங்காதேவியென்றும்,
வாயுபகவானென்று வாயுவையும்.

25. பிரிதிவியை பூமாதேவியென்றும்
பிறங்கு கிரகங்களு மிரவிமதியும்
வருணனும் பகவானென்று சொல்லி
வணங்கி வணங்கிமதி கெட்டபாவி.

26. செல்வந்தருபவள் சிதேவியென்றும்
சிறுமைக்குடையவள் மூதேவியென்றும்
கல்விசரஸ்பதி தருவளென்றுங்
காச்சல் வைசூரியெல்லா மாரியென்றும்

27. தலையிலெழுத்தென்றும் விதிகளென்றுஞ்
சதுமுக னெழுதுகிறவனென்றும்
அலையச்சனிவந்து பிடிக்குமென்றும்
ஆவிகொண்டேகுவது காலனென்றும்

28. விக்கினப்பட்டானைத் தலையைக்கொண்ட
விக்கினேசுரன் வினை தீர்ப்பனென்று
மக்களுக்குச் சாமளாதேவியினால்
வாந்திபேதியு முண்டாகுதென்றும்

29. கோட்டிசெய்யும் தெய்வங்கள் பொல்லாதென்றுங்
குலதெய்வம் பெரிதென்றுங் கும்பிடுவான்
வீட்டுத் தெய்வம் வேறென்றும் படைப்பிடுவான்
விளக்கைக் கொளுத்திவைத் தாணையிடுவான்.

30. கரிமுகஞ் சிங்கமுக யாழிமுகங்கள்
காளைமுகங் கற்கிமுகங் கடுவாய்முகம்
அரிமுகமொருமுகம் மஞ்சாணனம்
அரன்முகங் குகன்முக மாறுமுகங்கள். (ஓசை. 8 : 4-5.)

31. சதுர்முகந் திரிமுகம் பலமுகங்கள்
சடைகள் தண்டாயுதங்கள் திரிசூலங்கள்
கதிர்வேலுங் கொண்ட வுருவங்களாக
கண்டவர் நடுங்கச்செய்த சண்டாளன்.

32. மாட்டு மேலே திப்பொதி யெடுத்துழுது
மாட்டுக்குப் பொங்கலிட்ட மதிகேடன்
ஆட்டும்பாம்பைக் குரங்கைப் பூசைபண்ணி
யானை குதிரையடி தொட்டேறுவான்.

33. செம்பருந்தைக் கண்டவுடன் கன்னத்திலே
சிக்கெனவடித்துத் தெண்டனிட்ட பேயன்
கொம்பொடிந்த மூக்கரைப் பிள்ளையார்க்குக்
குட்டிக்கொண்டு தோப்புக்கண்டம் போட்ட குருடன்.

34. வில்வந்துளசி வன்னியுடனரசை
வேப்பமரத்தையுஞ் சுற்றி விழுவான்
புல்லூர்தருப்பையையும் சுற்றி விழுவான்
பொருளென்றறிவு கெட்டுப்போன தோசி. (எரே. 2:26-28)

35. ஆத்தியைக் கொன்றையை யறுகம்புல்லை
யலரிச்செடியையுங் கும்பிடுவோன்
காத்திரவரசுடன் வேம்பைவைத்துக்
கலியாணஞ்செய்து சுற்றிவலம் வருவான். (எசேக். 20: 32)

36. எறும்பனைமரத்தைத் தென்னைமரத்தை
எத்திமரத்தையுங் கும்பிடுவோன்
கூறுகெட்டுப்பட்ட மரத்தையுங் கூடக்
கும்பிட்டறிவு கெட்ட குணக்கேடன். (எரே. 17 : 2)

---

## தலங்கள்.

37. பெண்டாட்டியைப் பிடிக்கும் பழனியிலே
பிள்ளைவரங்கேட்டலைந்த பேயாண்டி
கொண்டாடித் தன்மனையை யாட்டிவித்துக்
கோடங்கிகள் குறிகள் கேட்டகுறும்பன்.

38. தன்மனையைத் தன்மகளைத் தங்கையரைத்
தலையைச்சிறைத்து மொட்டையிட்ட மூடன்
நன்மையென்று காசிக்குஞ் சேதுவுக்கும்
நடந்து தவித்து நலங்கெட்டமாடன்.

39. சிருஷ்டிகரைமறந்த தீபாவி
சிஷ்டிகளைத் தெய்வமென்ற சீர்கேடன்
கஷ்டவுருவங்களைத் தேடித்தேடி
காவடி சுமந்து கடைகெட்டகருமி. (2. ரோ. 1 : 25.
எசேக். 14 : 3-8.)

40. காவடி சுமந்து கடுந்தவங்கள் பண்ணிக்
கனவிரதங்கணோம்புகள் பிடித்து
பூவலஞ் செய்தாறு குளஞ்சுனைகள்
பொங்கு கடலுந் தேடிப்போன பாவி

41. கங்கை ராமேசுரஞ் செகநாதம்
கடுந் தூரங்கள் சென்று கடைகெட்டவன்
செங்கை கால்கோணங்கி வலித்துக்கொண்டு
செடில்குத்தியாடின சீர்கேடன்.

42. திருவடியென்றழகர் கோவிலிலே
செருப்பைச் சுமந்துநின்ற சித்தாண்டி
குருவடையாள மென்றிரண்டு தோழிற்
கூறுகெடச் சுட்டுக்கொண்ட கோமாளி.

43. நஞ்சுண்ட கூடலூர் தன்னிலேகி
நரகலுக்குத் தூபங்காட்டினவன்
வஞ்சகக்குருக்களுட சொற்கேட்டு
மாதாந்தபண்டிகையுங் கொண்டாடுவோன். (எசா. 65 : 3-7
எரே. 6 : 13.)

---

## மாதாந்தரப் பண்டிகை.

---

44. தைப்பூசம் பழனியபிஷேகந்
தானஞ்செய்வது மத்தியார்ச் சனமே
அப்பாலு மாசிமகங் கும்பகோணந் திரு
வாரூர் பங்குனியுத்தரம் கொடியேற்றம்.

45. பங்குனி பவுர்ணையு மதன்பண்டிகை மரப்
பண்டார வேஷத்தின் கொண்டாட்டம்
அங்கமாய்த் தை மாசி பங்குனியி
னசனுசன் பண்டிகையினலங்கோலம்.

46. சித்திரைப் பருவத்திற் சத்ததானந்
திருவையாற்றிலோடுங் காவேரியே
வித்திரவைகாசி விசாகத்திலே
விதவித வூர்களெங்குமபிஷேகம்.

47. ஆனியுத்திர மெங்குமபிஷேகம்
ஆடிப்பூசம் பதினெட்டாம் பெருக்குத்
தானங்கள் பண்ணுதல் மூளைக்கொட்டுதல்
தங்கள் பெண்களை வீட்டுக்கழைத்து வைத்தல்,

48. ஆவணிமூலத்தில் மதுரையிலே
ஐமுகன் புட்டுக்கு மண்சுமந்தநாள்
காவலர் கொலுவிருந்தம்புபோடுங்
காலம் புரட்டாசி நவராத்திரி.

49. ஐப்பசி துலாம் பொன்னி சங்குமுகம்
அல்லாது சதுர்த்தசி தீபாவளி
சிறப்பத் திருவண்ணமலைத்தீப
தெரிசனங் கார்த்திகையிற் கார்த்திகையே,

50. சீர்மார்கழித் திருவாதிரையே
சிதம்பரத்தாருத்திரா தெரிசனமே
பார் மாந்தரைக்கெடுக்கப் பாப்பார் வைத்த
பாழுந்தலங்களெல்லாம் பாய்ந்த பாவி.

---

## விக்கிரகபக்தி.

51. அக்கினியைச் சுற்றிவந்து கும்பிடுவோன்
அறிவிலிவிளக்கையுங் கும்பிடுவான்
முக்கியதலங்களென்றும் தீர்த்தமென்று
முழுகித்தலையை மொட்டையிட்ட மூடன்

52. ஆற்றுக்குப்படைப்பிட் டருச்சனைசெய்
தாயுதங்களநேகங்கட்குப் பூசைசெய்வான்
வேற்றுக்கடலேறி மலையேறி
வீண்தவங்கள்செய்து வெறிகொண்டமாடு

53. நேமநிஷ்டையோ இவன்கேடுகளோ
நெய்வேத்தியங் களபிஷேகங்களோ
சீமையெங்குமுழியத்துக் காள்பிடித்துத்
தேரோட்டிப் புண்ணியங்கள் செய்தோமென்பான்.

54. விக்கிரகங்களை யெழுந்தருளப்பண்ணி
வேசிகளை முன்னாக ஆட்டிவித்து
திக்கதிரக் கொம்பூதிப் பறைமுழக்கிச்
சேனையாடம்பரங்கள் செய்தபாவி. (2 ரா. 34:13-15.
5 மோ. 12:23)

55. அங்கப்பிரதெட்சண முருண்டு பிரண்
டரிகண்டம் போட்டலகைக் கடிமைப்பட்டோன்
சங்கையற்றம் மணமாய் வாலையைவைத்து
சத்திபூசைகள்செய்த சண்டாளன்.

56. வெண்ணீருத்திராட்சங்களை யணிந்து
விதவிதராமக் கோடுகள் போட்டு
பெண்ணோடு முத்திரைத்தானம்பெற்று
பித்தம்பிடித்தலைந்த பேயாண்டி.

---

## பலவழிப் பூசைகள்.

---

57. சிவபத்திவிட்டுணு பத்திசத்தி பூசை
சித்திரகில்லையென்ற காபாலிகம்
அவபத்தியருகனைத் தொழும் பௌத்தம்
அறிவேதெய்வமென்ற சார்வாகம்.

58. செங்காந்தலைக் கழுத்திற்கட்டிச் சேர்ந்த
லிங்கதாரிகளுட னின்மூடம்
பக்கமுறும்பல தேவர்கள் பூசை
பஞ்சாட்சரபூசை குருபூசை.

59. மாரிபிடாரி மாகாளிபூசை
மாடனார்பூசை மயேசுரபூசை
ஆரியைபூசை யையனார்பூசை
ஆயுதபூசை சரசுபதிபூசை.

60. அருவருப்பான வரனரிபூசை
ஐங்கனத்து விக்கினேசுரன்பூசை
பரசமயங்களுட பாசாங்குகள்
பாழானபூசையெல்லாம் பண்ணினவன்.

61. பிசாசுகளுக் காடுமாடுகளைவெட்டிப்
பெலியிட்டுப் பொங்கலிட்டுச் சேவலடித்து
மசானத்திலாடியைக் கொண்டாடி
வாதுக்குத் தீமிதித்தவன் பாவி.

62. வீணைமந்திரங்களைச் செபித்து
வெறிகொண்டு பேய்களுக்குக் காப்புக்கட்டி
நாணமல் நெய்விளக்குகளேந்தி
நடுத்தலையிற் கரகம்வைத்தாடுவான்.

63. அந்தரத்திற் சூரியனை நமஸ்கரித்து
அரியதவங்கள் செய்த வந்தகாரி
சந்திரசூரிய கிரகணங்களுக்குத்
தானங்கள்பண்ணி யொருசந்திப் பிடிப்பான். (எரே. 19 : 13.)

64. தன்மகவைப் பேய்க்குப் பலிகொடுத்துச்
சாம்பலாய் தகனித்த சண்டாளன்
கன்மனங் கொண்டு தன்னைப் பெற்றவரைக்
கங்கையிலெடுத் தெறிந்த கடும்பாவி.

65. சேயரைவெட்டிப் பெலியிட்டபாவி
தீப்பாயப் பெண்டீரைச் செய்தபாவி
தாயாரைத் தந்தையரைச் சாமுனமே
சானதியிற்றள்ளிவிட்ட சாமித்துரோகி. (எசே. 20 : 31.)

## பொய்க் குருக்கள் வியாபாரம்.

66. கத்தபம்போலே பசுவின்சாணிபிடித்துக்
கணபதியென் றறுகம்புல்லைச்சூடி
பத்தியுடனே விழுந்துகும்பிடச் சொல்லி
பாலகரின் கண்களைக் கெடுத்தவாத்தி.

67. பச்சரிசியும் பணமும் பறித்துக்கொண்டு
அட்சரச்சுவடியிலே மஞ்சள்பூசி
துச்சனுக் குஞ்சாணிக்கு தூபங்காட்டிச்
சுவாமி என்றோதுவித்த துஷ்டவாத்தி. (எசேக். 14: 4-8.)

68. தேங்காயுடைத்துவைத்து வஸ்திரங்களுந்
தின்பதற் கவற்கடலை தாம்பூலமும்
பாங்காய்ப் படைக்கச்சொல்லி யெடுத்துக்கொண்டு
தூங்கலைப்பணியச்சொன்ன துஷ்டவாத்தி.

69. சாம்பலைவிற்றுப் பணஞ்சம்பாதித்தான்
தருப்பையைவிற்றிவன் பணம் பறித்தான்
சாம்பலுந்தருப்பையு முத்தியென்று
சாதிகளின் கண்களைக் கெடுத்த பாப்பான். (5 மோ. 13: 1-5)

70. சாம்பலைவிற்றுக் கோமியங்குடித்தால்
சாயுட்சியமென்று சொன்னசதிகாரன்
பாம்பைக்குடத்திலிட்டுப் பூசைசெய்தால்
பரகதியென்றுரைத்த படுபாவி.

71. எண்ணெயைத் தேனையபிஷேகஞ்செய்தா
லிந்திரனு வாயென்றெத்தினவன்
கண்ணைக் கெடுத்திந்துச்சாதிகளின்
கைப்பொருளெல்லாங் கவர்ந்துகொண்ட திருடன்.

72. கலியாணங்கள் ருதுசாந்தி
கருமாந்திரங்கள் திதிகளென்று
விலைமாதரைப்போல மயக்கி வித்து
மிரட்டி மிரட்டிப் பொருள்கொண்ட பாப்பான்.

73. எக்கியஞ்செய்து புனர்சென்மமெடுத்தா
லெள்ளுடன் பொன்னுங்கூட்டித் தானமிட்டால்
முக்கிய பதவியென்றிராசாக்களை
முழுதுமயக்கிவித்த மோசகாலன்.

74. தாதனுக்குமாண்டிக்கும் பாப்பானுக்கும்
தருவது மோட்சமென்ற சண்டாளன்
சேதருணசலம் ராமராமா
சிவசிவாவென்றாலுஞ் சித்தியென்றவன். (எசேக். 14:3-8.)

---

## நாட்பார்த்தல்.

---

75. நட்சத்திரங்களும் கிரகங்களும்
நன்மைதுன்மைக்குக் காரணங்களென்பான்
பட்சிச் சகுனங்களைச் சாஸ்திரங்களைப்
பார்ப்பான் மதிகெட்டுப் பார்ப்பானே. (5 மோ. 18:10-14.
எசா. 2:6.)

76. நன்மையுந் துன்மையுந் தான்பிறந்த
நாளால் வருகுதென்று நம்பினவன்
புன்மை யறிவினல் வள்ளுவனைப்
பொய்பேசும் பாப்பானைப் பூசித்தவன். எசா. (47:12-13.
4 மோ. 23:23)

77. நட்சத்திரப் பொருத்தங்கள் பார்ப்பான்
நல்லநாட் பொல்லாதநாட் பார்ப்பான்
அச்சமற்றுப் போயகர்த்தைகொண்டு மீறி
ஆடிமணமிடுதற் காகாதென்பான்.

78. ஆடிமாதங் கலியாணஞ்செய்ய
லாகா தென்றகற்றின வக்கியானி
கூடியிருப்பதற்கு நாட்பார்ப்பான்
குடுகுடுப்பைக்காரன் கிட்டகுறி கேட்பான்.

79. வீடுகட்ட மனைச்சாஸ்திரம் பார்ப்பான்
வெள்ளிநன்று செவ்வாய் வெறுவாயென்பான்,
மாடுபோல் வேதத்தைப் படித்திருந்து
மக்களுக்குச் சாதகமெழுதி வைப்பான்.

80. திரட்டிசுற்றத் தன்மகளுக்கிடங் கொடுப்பான்
திட்டியென் றுலாத்தியெடுக்கச் செய்வான்
பிரட்டுக்காரப் புலையர் தங்களிடத்திற்
பிள்ளைகளை மந்திரிக்கச்சொல்லி விடுவான்.

81. கடினவியாதிகள் வந்தபோது
கழிப்புக்கழித்துக் கருமங்கள்பண்ணுவான்
அடிமையுலகத்தின் மக்களுக்கொப்
பாக நடந்துகொண்ட வரும்பாவி.

82. குலத்துக் கெதிர்செல்லப் போகாதென்பான்
தும்மலுக்குங் காதலுக்கும் பயப்படுவான்
கோலத்துப்பிள்ளைகளி னெற்றியிலே
குறியிட்டிராமமிடச் சம்மதிப்பான்.

83. விக்கிரகக் காரரிலுங் கேடாக
வேதத்தை நூறுவிசை வாசித்தாலும்
அக்கினி மூலையிலடுப்பு வைப்பா
ளுயிரம் விதஞ்சாஸ்திரம் பார்ப்பான்.

---

## சுயபுண்ணியம்.

84. பொன்னைச்சினேகித்த முழுலோபி இவன்
பொருளைச்சிநேகித்த பொல்லாதவன்
தன்னைச்சிநேகித்துத் தனைவளர்த்தி
தன்னைப் புகழ்ந்துகொண்டிருந்தபாவி.

85. தன்னையதிகமாய் நேசித்தவன்
தன்சீவனைப் பெரிதாய் எண்ணினவன்
தன்னைப்படைத்தவரை நேசிப்பதில்
தன்தகப்பனைத் தாயை நேசித்தவன்.

86. பராபரவஸ்துவை யெல்லாத்தையும்
பார்க்கநேசிக்காத படுபாவி
தராதலத்தையு மதின்வஸ்துவையுஞ்
சருவேசுரனைவிட நேசித்தவன்.

87. மங்கையரை மக்களை மனையாளை
மாயையை நேசித்த மதிகேடன்
சங்கையுள்ள பேர்களிட்டுக்கொண்டிருந்தவன்
தன்சாதிபெரிதென்று சாதித்தவன்.

88. தன்றிறத்தைத் தன்பெலத்தை நம்பினவன்
தன்கிரியைமுத்தியென்று சாதித்தவன்
தன்றருமங்களை யுபவாசங்களை
தன்றவங்களைப் பெரிதாய்ச் சாற்றினவன்.

89. சீவனுள்ள மானிடரை நம்பினவன்
செத்தவர்களைத் தேடிச்சென்றலைந்தோன்
பூவிலுள்ளராசர் கண்மேனோட்டம் வைத்துப்
பொய்ப்பொருளை மெய்ப்பொருளாய்ப் போற்றினவன்.

90. தெய்வபயமணுவு மில்லாதான்
தேவபத்தியே தென்றறியாதான்
வையமனுஷருக்குப் பயப்படுவான்
வாழ்வவர் புண்ணியத்தால் வந்ததென்பான்.

91. மிஞ்சிமிஞ்சித் தன்னையெண்ணிக் கொண்டாடுவான்
வீணனைமனுடரைத் துதிபண்ணுவான்
அஞ்சியஞ்சி யுலகத்துக்கொப்ப நடப்பான் தன்
னதிஷ்டத்தினால் வாழ்வுண்டாச்சு தென்பான்

92. இந்த விதமாகப் பத்துக் கற்பனையிலே
முந்தின கற்பனையை முழுதாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனார் சமுகத்தில் வாசித்தானே.

---

## 2-ம் கற்பனை.

---

### விருத்தம்.

சேனைகள் ஒழுங்கினிற்கத் திரளெலாம் நடுநடுங்க
வானவர் கூர்ந்து கேட்க மானுவேலாசனத்திற்
றானமைந் திருக்கமோசே சாற்றினன் றேவநாம
மீனமாய் வழங்கினோரை யிரு கற்பனைப் பிரகாரம்

### தேவ லட்சணம்.

---

1. ஒன்றானசருவ நியாதிபனே யிவன்
உண்மை சற்றுமில்லாத குணக்கேடன்
குன்றாமல் தேவநாமத்தை வீணிற்
குறித்து விளம்ப மனங்கூசாதவன்

2. தேவலட்சணங்களைத் தாறுமாறாயற்ப
சென்துகளுக்கான தென்று சிந்தித்தவன்
மாவலுசத்துவ நாமத்தின் மகிமை
மனதிலணுவும் நினையாதவீணன்.

3. எல்லாமறிந்தவ ரெங்குநிறைந்து
மென்னடத்தை சூதுபவ மறியாரென்பான்
வல்லாளன்றன் ஞானம் பெரிதென்பான்
மாநீதிமா னென்று தன்னை மதிப்பான்.

4. வல்லமையுள்ளோ ரென்றறிந்திருந்து
வாதாகத்தன் றிறமை நினைத்தவம்பன்
நல்லவரிரக்க முள்ளோ ரென்றுணர்ந்தும்
நம்பிக்கையில்லாமலவ நம்பிக்கையுற்றேன். (மத். 10: 32-33.)

5. சர்வவல்லமையுளோர் தன்னிடுக்கத்தைத்
தவிர்த்திடக் கூடாதென்றெண்ணி வெறுத்துக்
கிருபை நிறைந்த திருச்சமுக முன்பாய்க்
கிட்டிபவ மன்னிப்பைக் கேளாதவன்.

6. நரகத்தினின்று விடுக்கவந்த
நாதனைத் தேடாமற்றன்னீதியைப்
பரிசுத்தமா யெணுமவசுத்தவான்
பாதகன்றன்னுடெல்லாங் கூடுமென்பான்.

7. தன்மனத்தாற்றன்னினை வாற்றன்னடத்தையாற்
சாற்றும் பலவார்த்தை களாற்றூஷித்தவன்
கன்மனதாய்ப் பாவத்தினிலைத்திருந்துங்
கத்தரிரக்கமுளோ ரெனக்கருதி

8. வீணாசைகளை நிறைவேற்றுதற்கு
விருப்பமாய் தேவலட்சணங்களையுன்னி
நாணமற் பகைவரை நாசஞ்செய்ய
நாமவலமையையெண்ணி நாட்கழித்தோன்.

9. தேவனையே மகிமைப்படுத்தி
தேவசித்தத்தையே செய்கிறேனென்று
பாவங்களனைத்து மூடிவைத்து
பத்தியுளோன் போலிருந்த பசாசானவன். (மத். 4, [illegible]
16, 17.)

10. நம்பிக்கையற்றிருந்தும் நாதனையே
நம்பிவந்தேனென்று சொன்ன நாசகாலன்
வம்பாகப்பத்தியின் வேஷம் போட்டு
மாறுபாடாய் நடந்தவஞ்ச மனத்தான். (1 மோசே. 3, 5.)

11. ஆளுவங்களாடம் பரங்களைச் செய்ய
ஆகடியங்களையும் நடப்பிக்க
வீண்.லே கடவுளை வேலைகொள்ள
விரும்பின கடும்பகைச் சண்டாளன். (யோபு. 31, 30.)

12. நீடியசாந்தமுள்ளவ ரென்று
நீடித்துப் பாவத்தினிலைத்திருந்து
தேடியேபரனைச் சேவியாமல்
திடீரென்றழிந்து கெட்டதீக்குணத்தான்

13. பஞ்சபூதியங்களைப் படைத்தவனைப்
பழித்தவன் சூரியனைப் பாழென்பான்
வஞ்சமழை பெய்யுதென்று வசைமொழிவான்
வல்லிடி யிடிக்கவுமதத்திருப்பான்.

14. காற்றையுங் காற்றை வரவிடுத்த
கத்தனையுந்தூஷித்த கடும்பாவி
ஆற்றிலே வெள்ளம் பெருகச்செய்த
அதிபனை மதத்துடஹங்காரிப்பான்

15. அக்கினியாலமுதுண்டு பொசித்தமைந்தும்
ஆண்டவனிதேன் படைத்தானெனப் பழித்தோன்
முக்கியமாயுலகிற் பிழைத்திருந்தும்
முற்றிலு நன்றிகெட்ட மோசவாயன்

16. சமுத்திரமலைகளைத் தன்னுதவிக்காய்த்
தந்தவனை யெண்ணாத சதிகாரன்
சமத்துள பல பொருள் செய்து காத்த
சாமியை நிந்தித்த சண்டாளன்.

17. சாமியை நானறிவேனென்று சொல்லுவான்
சாமியென்னை யென்ன செய்யுமென்று மொழிவான்
சாமிக்கெனக் கென்னவென்று தடுத்துரைப்பான்
சாமிக்குப் பயப்படாத சண்டாளன்.

---

## ஆணையிடுதல்.

---

18. விளையாட்டிலும் வீண் தருக்கத்திலும்
விண்ணவ னுமத்தைச் சொல்லி விளம்பினவன்
சளையாமற் கோபத்திலாணையிட்டு
சங்கடம் வருத்திவித்த சதிகாரன். (5 மோ. 28, 58: 59·)

19. வானத்தைப் பூமியைப் பஞ்சலோகத்தை
வசவுக்கிடமாக்கி சத்தியஞ் செய்வான்
தானத்தை வானவன் பாதப்படியாய்ச்
சற்று நினையாமல் வீண்சத்தியஞ் செய்வான்.

20. தேவாசனத்தின்மேற் சத்திய மென்பான்
தேவாலயத்தின்மேற் சத்திய மென்பான்
தேவாராதனையிற் சத்தியமென்பான்
தேவாட்டுக் குட்டியின்மேற் சத்திய மென்பான்.

21. ஞானத் திரவியத்தை யவமதித்து
ஞானஸ்நானத்தையு மவமதித்து
ஞான கற்பனைப்பெட்டி யவமதித்து
நஷ்டம்வர ஆணையிட்ட நாணையமில்லான்.

22. வேத பொஸ்தகத்தி லடித்துத் தந்து
வேத வாக்கியத்தைப் படித்துச் சொல்லி
வேதபதம் வேதசாஸ்திரம் பலதில்
வீசிக் கையடித்த வீண் புளுகன்.

23. கத்தரின் பாடுகள்மே லாணை யென்பான்
கத்தரைந் துகாயத்தி லாணையென்பான்
கத்தரின் முண்முடிமே லாணையென்பான்
கத்தரின் சிலுவை யாணையென்பான்:

24. அஞ்ஞானக் கோவிலிற்போ யாணையிடுவான்
அஞ்ஞானியாகவே யாணையிடுவான்
அஞ்ஞானி மெஞ்ஞானிக் காணையிடுவான்
அஞ்ஞான அகந்தைக்கு மாணையிடுவான்.

25. திரித்துவ வஸ்துவின்மே லாணையிடுவான்
சிரித்து நகைத்துக் கொண்டாணை யிடுவான்
குருத் தத்துவத்தின்மே லாணையிடுவான்
கொண்ட அடஞ் சாதிக்கவு மாணையிடுவான்.

26. உன்னுமஞ் சொல்லியிவ னாணையிட்டு
முறுதியி னில்லாத சதிகாரன்
உன்னூழியர்க ளுபதேசமெலா
மொன்றுமிலை யென் றவமதித் துரைத்தோன்.

27. கிறிஸ்தவனெனப் பெயர் தரித்துக்கொண்டு
கேடுகாலஞ் செய்த பொய்ச்சத்தியன்
வெறுத்த பில்லி சூனியங்க ளஞ்சனம்
வீணென்று கண்டுமதை விரும்பினவன். (5 மோ. 18 10: 14
2 மோ. 22 : 18)

28. தீவினை நித்த நடப்பிவித்துந்
தேவசித்தமாயிற்றென்று சிந்தித்தவன்
மாவித்தை மந்திரதந்திரங்கள் செய்து
வானவ னாமத்தை வீணாக்கினோன்.

29. பொருத்த நிமித்தங்களை நம்பிநம்பிப்
புலையரிடத்திற் சென்று குறிகேட்பான்
வருத்திய மந்திரங்கள் தந்திரங்களை
மாந்தரீகங்கள் பில்லி சூனியங்களை.

(3 மோசே. 19, 31 : 20 6-27)

30. செப்படி வித்தைகளை யாருடங்களைச்
சிற்றின்பப் பாட்டுகளை நாடகங்களை
பற்பல வேஷங்களை யஞ்சனங்களைப்
படித்துப் படித்துப் பிசாசாய்ப் போனவன்.

31. காவாலிப் பாட்டையும் பாடிக்கொள்வான்
கத்தரையும் பாகாலையுஞ் சேவிப்பான்
தேவநாம அறிக்கையுஞ் செய்திடுவான்
திருவாதரங்கள் பல நிறைத்திடுவான்.

32. விஸ்தரித்துப் புஸ்தகங்கள் வேணதெழுதி
விலைமாதர் பாடல்களைக் கூடவெழுதி
உத்தரிக்கக்கூடாத அகந்தை செய்து
உன்னதனினும வின்னம் உரைத்திட்டவன்.

---

## கோவில்.

---

33. கோவிலுக்குப் போகிறதாய் போக்குச் சொல்லி
கூத்துவாசாப்புகள் பார்த்து வந்தவன்
தேவனுக்குத் தாசியென்றும் வேசியென்றுஞ்
சேனைபேரைக் கெடுத்துத் தீயில் விட்டவன்.
(2 இரா. 10 16 : 31)

34. தட்டிமணியடித்துங் கோவில் புகான்
சண்டை வந்தால் சபிக்க ஒடிவருவான்
குட்டிச்சுவராக வென்பான் கோவிலைக் கிட்டி
கோகோ நீ கேளுமென்று கூப்பிடுவான்.

35. கோவிலிலே மண்ணைவாரி தூற்றிடுவான்
கூறுகெட்ட தெய்வமே எனப்பிதற்றி
காவாலிப் போக்கிரியாய்த் திரிந்துங்
கடவுளென் பங்கென்று கதறிடுவான்.

36. கோவிலில் ரகசியம் பேசிக்கொண்டு
குண்டணிகள் சண்டைகளைக் கொளுவினவன்
தேவனிருமை மருச்சிக்கையில்
செத்தபிணம் போலசையாதிருந்தவன்.

37. தேவாலயத்தினிலே திருச்சபையார்
தேவாராதனை செய்யுஞ் சமையந்
தேவநாமஞ் சொலச் சிரவணக்கம்
செய்யாதிருந்த தீபாவி.

38. எகனை வணங்குஞ் சமயத்திலே
யிடக்கும் பரியாச வம்புபேசி
சோகமாய்ப் படுத்துக் காணீட்டி
சோம்பலாய்ப் பாவத்திற் றூங்கினவன்.

39. வாதநோய் வந்தபோது வணங்கிநின்று
வானவனைப் போற்றினவன் மாறிவிட்டால்
சாதனையாய்க் கற்போல சாய்ந்திருந்து
சாமியை பணியாச் சண்டாளன்.

40. கோவிலுக்குப் போகவென்றால் கால்வலியாங்
கும்பிடுவணக்கத்துக்குங் கைவலியாந்
தாவித்தாவி விக்கிரகக் கோவிலுக்கோ
சண்டப்பிர சண்டனென ஓடி விழுவான்.

41. யேசுவி னுமஞ்சொல்ல வாய்திறவான்
எனக்கென அக்கரையென் றெண்ணியிருப்பான்
காசாசை வெறிகொண் டெந்நேரமுங்
கவலையாய்க் கத்திகத்தித் தவித்திடுவான்.

42. இராமாயாணம் பாகவதங் கூர்ந்துகேட்பா
னிராமுழுதும் விழிப்பானித்திரை செய்யான்
நேமுகச் சதுர்ப்பிரசங்க நீண்டதென்பான்
நித்திரைக் கிடைஞ்சலென அவமதிப்பான்.

43. சம்பளம் போமென்று கோவிலிலே
சாமியைநாடி வேதம் படித்தோன்
சம்பளத்தையையர் பிடித்தோட்டுவரென்றிங்
கோடிவந்து சாடையாய்ச் செபஞ் செய்தவன்.

44. ஐயருக்காய் போதகருக்காய் வேண்டி
ஆராதனைக்கு வருவான் சேர்வான்
ஐயரிலை என்றவுடன் கோவிலை விட்டே
யக்கரை சற்றில்லாம லமர்ந்திருப்பான்.

45. வேதத்தைப் போதகர் விஸ்தரிக்கையில்
வீட்டுக் கருமங்களைப் பேசினவன்
காதற்ற ஊசியும் வாராதென்று
கண்டுகொண்டும் பண்டம்விலை விண்டோதுவான்.

46. வேதபாருயண பிரசங்கியாய்
வீண்காரியங்களை தூற்றி விரைவாய்
சாதுகுணப்பத்தியாய் ஆட்டுத்தோலை
தரித்துளே யோனைக்குச் சரிநடந்தோன்.

47. திருட்டுப் பொருள்களைச் சேர்த்துவைப்பான்
தினந்தினமுஞ் செபித்துச் செலவழிப்பான்.
குருட்டுச் சாஸ்திரங்களைப் பார்த்துப் பினுங்
கூசாமற் கோவிலிலுங் கும்பிடுவான்.

48. கோவிலுக்கு வேண்டுமென்று பணம் பறிப்பான்
குடித்தூச் செலவழித்து நாட்கழிப்பான்
கோவிலுடமைகளை நல்லதென்றெண்ணி
கொண்டுமறைத் தாண்டவனை நிந்தனைசெய்வான்.

49. கொண்டமன எண்ணம் நிறைவேறமட்டுங்
கோவிலிலுங்கும்பிடுவான ம்பிக்கையாய்
மண்டுசில துன்பம் வந்தகாலை
மறுதலித்துப்போன மாபாவி.

50. இக்கட்டு தரித்திர மிடுக்கத்திலே
ஏகனென்றொருவனை யிறைஞ்சினவன்
மக்கள் பொருட்க ணிலமிகுத்தால்
வானவனேதென்று வாதாடுவான்.

51. பத்திசற்று மில்லாமல் வேதாகமம்
படித்தால் மற்றோரைக் கெடுத்துவிட்டோன்
கத்திமெத்தப் பாடியுங் கத்தர்தயவை
கருத்திலுணராத காய்மகாரன். (1. மோசே. 31 : 29.)

---

## வீண் சேபம்.

---

52. அற்பபல வீண்காரியங்களுக்கும்
அசட்டையாய் நாமஞ்சொன்ன அறிவீனன்
சொற்ப நினைவுமின்றி செபஞ்செய்தவன்
தூங்கி விழுந்தலப்புஞ் சோம்பேறி.

53. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையில்
மனதை முழுதும்வைத்து செபம் செய்தவன்
விண்ணாளுங் கடவுளை யெண்ணாமலே
வீணிலே கோவில்புகும் வெறும் பிலுக்கன்.

54. மாறாத பரமன் மண்ணுலகில்
மானிடவுயிர்களுக்க முதளித்துஞ்
சீராக வெறுத்துப் புசியாமல்
தேவனை நம்பினோனென்ற சிதடன்.

55. அவசியமில்லாத சமயத்திலே
அவமதியாகவே பசித்திருந்து
பவமுறச் சோம்பலிற் படுத்தயர்ந்தும்
பராபரன்றுணையென்ற படுக்காளி.

56. ஜெபஞ் செய்திருக்கையிலே தீவினையெண்ணி
செபமுடித்தானபின்னர் செய்யத்துணிந்து
செபப்படி நேர்ந்ததென்று சந்தோஷித்து
செபங்கெட்டுநடந்த சீர்கேடன்,

57. செபத்தைப் பவத்துக்குக் காரணமாய்ச்
செபத்தை வன்மத்துக்குச் சீருளதாய்
செபத்தை யெரிப்புக்குச் சேர்ந்ததுவாய்
செபத்தைச் செபத்தைச்சொலி சிந்தனை கேட்டோன்.

58. செபத்திலே கண்டதெல்லா மலப்பிடுவான்
செபத்தை யணுவேனு மதித்துரையான்
செபத்தைநினைவோடே செப்பாமலே
செபத்தையவத்தமாய்ச் சிந்தித்தவன்.

---

## சந்தேகம்.

59. கர்த்தருக்குக் கோவிலைக்கட்டி வைத்தான்
கல்லுப்பிள்ளையாருக்கு மடங்கட்டினான்
சத்திரம் பள்ளிக்கூடந் தருமசாலை
தாபித்து விக்கிரகங்கள் ஸ்தாபித்தவன்.

60. சராசரமனைத்தையுந் தாங்கிவருந்
தயாபரனின் றன்மையையறியாமற்
பராபரனேதென்று பயித்தியமாய்ப்
படித்துமறிவு கெட்ட மடையனிவன்.

61. நெற்றியிலே பொட்டுவைத்து ராமம்போட்டு
நீறுபூசித் தாறுமாறாய்நின்று தவித்தோன்
சுற்றி சுற்றி தெய்வமோ விக்ரகமோ
தோன்றுதிலை யென்றலைந்த கொடுந்தோஷி.

62. தேவாலய விளக்குக்கெண்ணை கொடுப்பான்
தேரோட்டி விக்கவும் பணங் கொடுப்பான்
சீவா திபதியை யுணராமல்
திகைத்துப் பலபேரைச் சிந்தையில் வைத்தோன்.

63. கல்லைவணங்க மதிகெட்டவனைக்
காடியையும் நாயையும் வணங்குவனை
சொல்லைநம்பி யலுவல் கொடுத்திடுவான்
தூஷித்த ரோசிப்பான் கிறிஸ்தவனை.

64. புதுக்குணம் புதுப்பலன் போய்ப்பழைய
பொல்லாத சிந்தைகட் கிடங்கொடுத்தோன்
மதிப்பற்றுக் கிறிஸ்தவர் பசித்திருக்க
வஞ்சக அஞ்ஞானிகளை வாழ்கவைத்தான்.

65. தேவனினுமம் பரிசுத்தமாய்த்
தேவனின் செங்கோல் செகமுழுதாய்
மேவவிரும்பியே செபஞ்செய்வான்
விக்கிரகக் கோவிலுக்குத் தொழும்பு செய்வான்.

66. உன்னுமை நிமித்தங் கலையந் தண்ணீ
ருவந்தளித்தோன் பலனிழந்திலனுல்
தன்னுமம் புகழ்ந்தார் தமைமாதத்திரஞ்
சங்கித்துதவி செய்த சண்டாளன்.

67. இந்த விதமாகப் பத்துக்கற்பனையிலே
யிரண்டாங்கற்பனையை முழுதாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனுர் சமுகத்தில் வாசித்தானே

ஆக வகை 1-க்கு விருத்தத்தோடு 190.

# 3-ம் கற்பனை.

## ஓய்வுநாள்.

### விருத்தம்.

ஓய்வு நாளுகைத் தோற்கட் குரிமையாய மைத்தநாதன்
ஞாய பத்திராசனத்தில் நடுவிட வீற்றிருந்தா
ஞயிறில் வேலைசெய்து நாளவமாக்கி வீணில்
மாயஞ்செய்தோரை மோசே வகைவகை விபரித்தானால்.

1. ஒய்வுநாளா சரிக்கக்கட்டளையிட்ட
ஒய்வுநாட்கதிப நியாயாதிபர்
ஒய்வுநாளென்றவுடன் மனங்கசந்து இவன்
உத்தமமாயா சரியாச்சுத்த அலத்தன்.

2. ஆறு நாளியாவையும் படைத்த பின்னை
ரமைவாயே ழாநாளோய்ந்திருந்த
மாறுதலிலாதவன் வார்த்தைகளையிவன்
மனதிலனு வெணு மதியாதோன்.
(1 மோ. 2, 23; 2 மோ. 35, 3.)

3. பாரமான வேலைசெய்தப்பால் மனிதன்
பாரமற்றிளைப் பாரமாதயவாய்
வாரமெரிருநாட்பரமன் வகுத்திருக்க
வாதாடி வேலைசெய்து சூதாடுவான்.

4. இளைப்பாறி முசிப்பாற்றியிருக்க
ஏழுதினத் தொருதினங்கட்டளையிட
களைப்பாயதிலும் வேலைசெய்து
கத்தர் தயவெண்ணுத கடினக்குணன். (2 மோ. 31, 14:15.)

5. வீணான வேலைகளை மிகச்செய்குவான்
வேணுமென்று திருநாளை யாசரியான்
நாணுமற் பாவத்தினுட் போக்கி
நாயிறு தினம் நினையா நலமற்றோன்.

6. சகல வஸ்துக்களையுந் தந்தளித்த
தயாபரனை வணங்காச் சண்டாளன்
மகிழவே யேழிலொரு நாளை
மனங்கொண்டாசரியா தினக்கலகன்.

7. பராபரன் கிருபை லட்சணங்கள்
பரிசுத்த வேதாட்சர வெளிச்சம்
பராமரிப்பிதுகளை யோய்ந்திருந்து
பத்தியாய் நினையாப்பாழ் மனத்தான். (சங். 119 : 59.)

8. வாரத்தின் கடைசி நாட்பரனை
வணங்கினரோய்ந்து கிறிஸ்துயிர்த்தல்
வாரத்தின் முதனாளானத்தினால்
மகிமையீதறியா அந்தகாரன். (அறி. 1, 10; 1 கொரி, 16, 2.
அப். 20 : 7.)

9. தெரிசித்த ரூபிப்பரனுதித்த
தினமும் வாரத்தின் முதற்றினமே
கரிசித்தரட்சிப்பு முடிந்ததினங்
கண்டு கொள்ளக்கூடாத தர்க்கவாதி. (அப். 2 : 4.)

10. இருதயவாக்காற் கிருபையினா
லேகனிநாளை மீறினவன்
துரிதமாயாசைபல இச்சைகளையுந்
தோன்றினபடி செய்யுந் துர்ச்சீலன்

11. கடந்த தினங்களிற் கத்தர்தயவைக்
கருதி யொவ்வொரு வாரத்திலும்
நடந்தாலயத்தை நணுகாமல்
நாயிறை நலந்தப்பி யெண்ணினவன்.

12. உத்தம விசுவாசத்தினிலைத்
துத்தம மாயப்பரனைச் சினேகித்
துத்தம முறுதியோ வென்பதாய்
ஒய்வு தினத்திலுணராதான். (பிர. 5 : 1.)

13. நாயிறிற் கூட்டச்சபைகளுட
னுதனை வணங்க ஆலயத்திற்
றூய சமூகந் தொழுகாமற்
தூரப்பயணந் தொடர்ந்து செல்வான். (சங். 102 :21.)

14. நாயிறு நாள்வர மனங்கசந்து
நட்டம்வந்து லெபித்த தென்றுரைப்பான்
ஆயனையாண்ட பரப்பொருளையா
ராதித்துப்புகழ அசட்டை செய்தான்.

15. நாயிறிற் சபைகள்கூடிவரும்
நல்ல சமையங்கலகஞ் செய்தல்
மா இதமென்று வன்மம் வைத்து
மாறுபாடாய்த் திரிந்தவலுமுறடன்.

16. கர்த்தர்நாளில் கோவில்புகான்
காட்டில் நாட்டிலலுவல் செய்வான்
சுத்தமாய் மனம்பிடியாமலையா
சுவிசேடத்தையும் வாசிப்பான். (பிர. 5, 1 கொலோ. 3:16)

17. வேதஎழுத் தாராய்ந்தறிய
வேலையொழிந்தேய மர்ந்திருக்கப்
போதக அறிவும் பெருகச்செய்த
காதனை நாயிறில் நினையாதான். (எபி. 10:25
சங். 119: 17-18.)

18. ஒரு பரப்பொருளைத் தோத்தரித்தே
யுண்மையில் வணங்கி வேண்டியதைத்
தரமன்றுடச்சாப துவில்
சமயமிருந்து வணங்காதான். (எபி. 6 : 18-19)

19. கர்த்தருக்கடுத்ததன மனைத்துங்
கர்த்தருக்கடுத்த பொருளனைத்துஞ்
சித்தநினைத்தபடி மதித்தவமாய்த்
தேவனினுளைச் சீர்குலைத்தோன்.

---

## மாதிரி.

---

20. வீட்டார் சாபதில மர்ந்திருக்க
வீண்வேலைகளை யகற்றிவிட
சேட்டனிவனு யிருந்தவரைத்
திட்டமாய்க் கைக்கொள்ளக் கற்பியாதான்.

21. தேவபத்தித் தினந்தினம் பெருகிவர
சீராய்மற்ரோர் சாபதுவை
யாவலாய்க் கெண்டாடத்தன்மாதிரி
யனுவெனுங்காட்டாவகந்தை யுளோன். (மத். 5 : 15-16)

22. நித்தியகால ஆத்தும நன்மை
நிலைக்கசாபதி லோயாதான்
சத்தியபரனுர் மாதயவாயிஸ்
தாபித்த ஞாயிறை மீறினவன்.

23. கவனங் கருத்து மில்லாம
லவமாய்ச் சாபதை யருச்சித்தோ
னவமெய் வேதம் நன்குணர்ந்தும்
பவமே மேற்கொண்டோ யந்திருந்தோன்.

24. வேலைக்காரர் வேலைசெய
வேதத்தை வாசிக்க தான்மாத்திரம்
ஆலயஞ் சேர்வான் மற்றவரி
னுத்தும சுகந் தேடாக்கேடான்.

25. மனைவியை வீட்டிலலு வலுக்கென்றும்
மக்களைவெளி வேலைக் கென்றும்
தினஞ் சாபதுவைத் தனக்கென்றும்
சிந்தித்துக் கோவிலிற் செபித்து வந்தோன். (அப். 1 : 14.)

26. வண்டில்கள் கூலிக் கோடவிட்டுத்
தண்டின பணங்கள் சேர்த்துவைத்துத்
தொண்டுகள் பலசெயக் கற்பித்துத்
துன்மார்க்கங்கள் பழக்குவித்தோன். (யாக். 1 : 26.)

27. ஆதித்தவாரம் நல்லதென்பா
னஸ்திவாரம் பரிப்பானுணுவமாய்
வேதத்தைக் கேட்க பார்க்கவுமே
வேண்டிய சமயம் விரும்பாதான்.

28. குத்தகை வேலைக் கென்வீட்டை
கொடுத்தே னவர்கள் பாடென்பான்
கத்தரினுளையு மவமதிப்பான்
காரிய மெனக்கென வென்றுரைப்பான்

29. வீட்டிலே வேதமிருக்கு தென்பான்
வேண்டிய அலுமார் புஸ்தகங்கள்
கூட்டிவைத்துக் கோவில் புகான்
குருக்களும் திருநாளும் வேண்டாமென்பான்.

30 உலகப்பேச்சை யோய்வுதினத்
துலகுக் கேற்கப் பேசினவன்
அலுவல்ம ற்றோர் செயப்பார்த்து
மதட்டி யுணர்த்தா அறிவீனன்.

31. சாபதிலக்கியான காவியங்கள்
தருக்கங்கள் கேடுசெய்தல தக்கிரமம்
கோபித்தல் சண்டை கூக்குரல்கள்
குடிவெறி மிகுத்த குணக்கேடன்.

32. ஒய்வுநாளில் வேடிக்கைபார்த்து வருவா
னோய்வுநாளிற் கேளிக்கை யோடிப்பார்ப்பா
னோய்வுநாளிற் சந்தையிற் சரக்குவிற்பா
னோய்வுநாள் முழுவது முறங்கினவன். (ஆமோஸ். 8: 6.)

33. ஒய்வு நாட்களில் விருந்து செய்வான்
ஒய்வுநாளில் மருந்து தின்பான் வம்பா
னோய்வுநாளில் மாரிகோவிற் கேடான
உற்சவம் பார்க்க வோடினவன்.

34. ஒய்வுநாளில் நிலமுழுவான் விதைப்பா
னோய்வுநாளிற் போரடிப்பான் கணக்காய்வா
னோய்வுநாளிற் நீர்ப்பாய்ச்சிக் கடனேச்சி
யோய்வுநாளிலோ யாதவலு மூரடன். (எரே. 17 : 27)

35. ஒயா வயிற்றுக் கவலையா
லோயாதிருந்தோ னுன்னுளி
லோய்வாயமையுஞ் சபைநடுவே
யோய்ந்துன் வேதங் கேளாதான். (மத். 2 : 27.)

---

## அலங்காரம்.

---

36. ஒய்வுநாளே வாரத்துக்
கொருநா ளாராதனை வணக்கந்
தூயவேதங் கேட்கவுமே
துரிதாய்ப்போகா, வீணலுவன்

37. வயிறுநிரம்பப் பொசித்துண்டு
வானவனுளைப் புறக்கணித்து
மையர்தனைத் தேடாரெனப் படுக்கு
மயர்ந்த நித்திரை யாயாசன்.

38. வஸ்திரம் மடித்து வைத்திருந்தும்
வகையில்லை யென்று அகமிகுத்தோன்
கத்தரைப் பணிய நாயிறிலே
கணக்கிலா சாக்குப்போக் குரைத்தோன்.

39. வஸ்திரமில்லையெனக் கோவில்புகான்
வஸ்திரமிருந்துங் கோவில்புகான்
நத்துபிலாக்கில மனையாட்கு
நாயிறிலதினற் கோவில்புகான்.

40. கல்விழைத்தஓலை சிமிக்கியில்லைக்
காலுக்குக்கொலுசில்லை காப்புமில்லை
மெல்லிய வஸ்திரமில்லை வண்ணுனினம்
வெள்ளைகொண்டு வரவில்லை சள்ளை யென்பான்.

41. அடுத்தவன் கைகளாபரண
மதிக மாடைகளலங்காரங்
கொடுத்திலை கடவுளெங்களுக்குங்
கொடுத்தால் வருவோங் கோவிலென்பான்.

42. அலங்கிருதத் துடனழிவோரை
யாசாரத்துடன் கண்டுகொள்வான்
வலங்கொள் பரனி ஞயிறிலோ
வஸ்திரமிலையென் வம்புசொல்வான்.

43. மூக்கிலே சுவாசமுள்ள மனிதர்களை
முழுவதும் நம்பியலங்கரிப்பான்
தீர்க்க பாக்கியந் தந்தபரன்
றினத்திலழுக்காகச் சேர்த்திருப்பான்.

44. திருநாளில் வீடு சுத்திகரியான்
தேவாலயத்தையு மலங்கரியான்
பெருநாளிற் பொங்கலிற் பெரியோர்களின்
பிறப்பு வருகையைக் கொண்டாடுவான்.

45. ஆவியினு லுண்மையினுலும் பரனை
யாராதிக்கக் கற்பனை பெற்றும்
மேவுதஞ் சரீரசுத்தி யாத்தும சுத்தி
வேண்டாமென் றருவருப்பாய்த் தொழுதோன்.
(சங். 26 : 6-8.)

---

## சகாயம்.

---

46. எசமான் கோபிப்பா னென்பதாக
ஏற்றசமயம் போயலுவல் செய்வா
னிசமாய்னித்ய எசமானை
நினைவிலும் நாயிறிற் றேடாதான்.

47. சாபத நாளிற் றருமஞ்செய்யத்
தடையென்று சாக்குப் போக்குரைத்தா
னுபத்துப் படுகின்ருேர்க் குதவஇவன்
அக்கரை சற்றுமின்றி அமர்ந்திருப்பான்.

48. ஏழைகள் வாசலில் வந்திருந்து
மிரந்து கெஞ்சிக் கூவியுமே
நாளைவா நாயிறு தருமஞ்செய்யு
நாளல்லவென்று பற்கடிப்பான். (நெகேமி. 8:10, யாக். 1:27.)

49. பெட்டியில் மெத்தப் பணமிருந்தும்
பீராய்க் தொருசல்லி பெயர்த்தெடுப்பான்
செட்டுவிலை செல்லாத காசுகளைச்
சீக்கிரமுண்டியலிற் செலுத்து விப்பான்.

50. நன்மை வருக நன்மைபெற
நன்மை செய்க நன்மைக்கே
நன்மைப் பரனுர் சாபதுவை
நாட்டியிருந்துங் கேட்டை விடான்.

51. வீடுபெத்தி யெரிந்தாலும் வினையகற்ற
வேலைசெய்யக் கூடாதென் றெண்ணிவிதிப்பான்
கூடுலர்ந்து தவித்தாலு நீர் கொடுக்கான்
குறித்த கருத்தர் நாளின் கருத்துணரான். (லூக்கா. 6 : 9.)

---

## ஓய்வுநாட் கூலி.

---

52. வயிற்றுக்காரிய வலுவல்களை
வயணமாயாறு நாணடத்தி
பயித்திய நாயறிலமர்ந் திருத்தல்
பரனை வணங்குதலுமாகா தென்பான். (மத். 12 : 1.)

53. காலையுடன் மாலை ஞாயிறிலே
கைகட்டிக் கோவிலிலுளுட்கார
வேலையிலையோ வுபதேசியரே
வீடுபோமென்றதட்டி மெத்தப் பழித்தான். (லூக். 10 : 16.)

54. சூதாடினுற் பணமெத்த வருமே
சும்மா விருந்தாற் கூலிவருமோ
வேதங்கேட்க எங்களுக்குக் கூலி கொடுத்தால்
விரசாக நாயிறிலே கோவில் வருவோம்.

55. முன்னிருந்த போதகர்களை யன்மார்கள்
முடித்து செபப்பூசை படித்தவுடன்
சின்னஞ்சிறி தென்றுபணம் சேர்த்துத் தருவார்
செப்புவாய்மை நடத்தினுற் கோவில் புகுவோம்.

56. ஐயருக்கும் ஆண்டைக்கும் பணம் வரும்போ
லடியர்களுக்கும் வந்தாற் கோவில் வருவோம்
செய்யவுத்தியோகம் பணந் தந்தாலப்போ
தினந்தினம் வருவோங் கோவிலென்பான்.

57. போதகர் பிரசங்கம் போதாது
பூசிதைபர் எங்களுக்கு வாகனந்தந்து
காதலாய்க் கோவில்வர வுபசரித்தாற்
கடுகவருவோமென்று பகடி செய்வான். (1 தெச. 2 :13.)

58. நித்திய சதாகாலம் பராபரனைத்
துத்தியந் துத்தியமென்று தோத்தரித்து
முத்தியிலினைப் பாரும் பாக்கியத்தை
சுத்தமாயெண்ணுமை லோய்வுதினம் வெறுத்தோன்.

59. இந்தவிதமாக முதற் பலகையிலே
யெழுதிய கற்பனைகள் மூன்றையுமே
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனூர் சமூகத்தில் வாசித்தானே.

ஆக வகை 4-க்கு விருத்தத்தோடு 250.

---

## 4-ம் கற்பனை.

### விருத்தம்.

சகலவஸ்துகட்கு மேலாய்த் தம்மை நேசிக்கவேண்டும்
வகையைக் கற்பனைக்கண் மூன்றில் வரிசையாய் மொழிந்த—
சகமுள பெற்றோர்கட்குச் சங்கையா யுரைத்தசட்ட [நாதன்
மிகைசெய்தோர்களையு மோசே விபரித்தான் சமூக முன்பாய்.

### பெற்றோரையறிதல்.

1. தன்னைப்போற்றன் பிறனை நேசியென்ற
சமஸ்தவல்லமை மகராசாவே யிவன்
றன்னையே நேசித்து தாய் தந்தையை
சங்கைகெடப் பேசின சண்டாளன்.

2. தகப்பனே நீயெனைப் பெற்றதுமுண்டோ
தாயெனை நீசுமந்து தாங்கினதுண்டோ
வகுத்தவனமைப்பு நேர் பெற்றீரென்று
மட்டுமிஞ்சிப் பேசின மதியீனன்.

3. பெற்றவரை யுற்றவரை பெரியோர்களை
பிணிக்கு மருந்துதந்த வயித்தியரை
கற்றுரைத்த வாத்தியரைப் போதகர்களை
கனஞ்செய்ய எண்ணுதே கசுமாலன். (1 கொரி. 4 : 15.)

4. இடுக்கத்திலுதவின இனத்தாரை
யிக்கட்டிலாதரித்த அடுத்தோரை
யொடுக்கத்திலூன்று கோலாஞ்சிநேகிதரை
யுத்தமமாய்ச்சங்கை செய்யா வொட்டாரன்.

5. நீதித்தலைவர்களை யிராசாக்களை
நித்தியமுதவிசெய்யு முத்தமர்களை
பாதுகாத்தாதரிக்கும் மூப்பர்களை
பார்த்தவுடன் சங்கைசெய்யாக் காத்திரவான்.
(ரோமர். 13 : 14.)

6. நித்திரையி லிருட்டிற் கள்ளர்கள் வந்து
நீடியே திருடாமற் கேட்டையகற்றி
சத்திய நெறிப்படியே பாதுகாக்குந்
தலைவரைச் சங்கைசெய்யா வலுமுரடன்.

7. தேசத்தினதிபரை துரைமாரை
தினந்தின நன்மைசெய்யு முபகாரியை
நாசஞ்செய்ச் சத்துருக் கண்ணுரங்காம
லிராப்பகலாய்க் காத்துவருங் காவலரை. (ரோ. 13 : 4.)

8. துன்மார்க்கரைக் கடிந்து நல்லவர்கட்குச்
சுகபாக்கியங்களை யலுவல்களைப்
பன்மார்க்கமாதிரிப் பிழைப்புகளை
பழக்குந்தலைவர்களைப் பகைத்தெதிர்த்தான்.

9. மூத்தோரைக் காத்தோரை முந்தினர்களை
முக்கியரை பக்கிஷரை முனிவர்களை
சாத்திர மறிந்தபல ஞானியரைச்
சட்டைசெய்ய எண்ணாமற் தன்னை மதித்தோன்.
(1 பேதுரு. 2 : 17.)

10. தகப்பனைத் தாயை யீன்றவரைத்
தன்மனையை யீன்றாரைத் தமக்கையரை
தகப்பனுடன் பிறந்த சகோதரரைத்
தாயின் சகோதரரைச் சங்கை செய்யாதான்.

11. கண்கண்ட நேசனிலன்பு வையாதான்
காணாததேவனை யெவ்விதங்கண்டு
பங்கென்று போற்றுவன் பரிந்திவனும்
பத்தரையுஞ் சுத்தரையும் நேசியாதோன்.

12. நித்திய தகப்பன் சருவேசுரனே
நித்தியநம் பெற்றாரைச் சங்கைசெய்யவே
பத்தியின் கற்பனை தந்தும் பெற்றோர்களை
பரிந்திலன் பரனை நேசிப்பேனென்பான். (மத். 23 : 9,
எபேசி. 3 : 15.)

13. பிதாவாகிய பராபரனருளால்
பெற்றோர்க ளிவனைப்பெற்று வளர்த்து
சதாகால நன்மைசெய்ய ஆளாக்கியுஞ்
சங்கைசெய்ய மனமற்று சடைத்தவம்பன். (3 மோ. 19 : 3,
எபே. 1 : 15.)

14. ஞானத்தாய் தகப்பனை நல்லோர்களை
ஞானத்திரவியங்க ளீவோர்களை
ஞானக்கண்ணைத் திறந்த நாதாக்களை
ஞாயந்தப்பிப் பேசியஞ்ஞாய முரைத்தோன்.
(1 தெச. 5 : 12-13, கலா. 6 : 6.)

15. பெற்றோர்களில்லாத காலத்திலே தமைப்
பிள்ளையாகவே வளர்த்துப் பிரியஞ்செய்து
மற்றுமாற்றுமத்துக்காய் கவலை கொண்ட
மாதவரைத் தூஷித்த மாய்மாலன். (எஸ்தர். 2 : 7.)

---

## பராமரிப்பு

---

16. வேலைசெய்து சாப்பிட மனமற்றவன்
விருத்த வயதுள்ளோரைப் போஷியாதான்
மேலான பாக்கியத்தை விரும்பாமல்
வீட்டார் சகோதரனை நேசியாதவன்.

17. ஓர் தகப்பன் றுயாலே யுலகிலுள்ளோ
ருதித்தவரோருதிரக் கூட்டமென்று
சீரறிந்துந் தன்னை விசேஷமென்பான்
நீதற்றோனென்று தன்னைச் சிறந்துசொல்வான்.

18. மற்றவனே தன்னை யெண்ண மனதிலெண்ணி
மற்றவனைச் சங்கை செய்ய மதியாதான்
பெற்றவனைச் சங்கை செய்யப் பிரியமில்லையிவன்
பிள்ளை களுமவ்விதஞ் செய்வதை யறியான்.

19. பெற்றோர்க் கெனைப்போலே ஞானமுண்டா
பிச்சைக்காரர் லட்சைகெட்டோரச் சமு முற்றோர்
கற்றோரோ கல்வி நான் முடித்தேனென்று
காத்திரமாய்ப் பேச்சுரைக்கு வார்த்தையுடையான்.

20. பெற்றோர் பணங்களெல்லாந் தின்று வளர்ந்தான்
பெற்றோர் தனங்களற்றால் விட்டோடுவான்
பெற்றோர் கண், கை மடியினின்று வளர்ந்தும்
பெற்றோர் களைக்காட்டிலொன்று முதவான்.

21. பெற்றோரை யன்னமென்றலைய விட்டான்
பித்தலாட்ட வேசியைக் கொழுக்க வைத்தான்
பெற்றோரை வஸ்திரமிலாமலகற்றி
பெண்டாட்டிப் பட்டுடுத்தி வாழ்கவைத்தான்.

22.' பெற்றோரை நம்பாமற் பேசியதட்டி
பெற்றோர் கணன்மை தன்மை முற்றும் வெறுத்து
பெற்றோர் பிழைத்தால் மரித்தாலென்ன
பெற்றோர்கள் பயன்ருன் பெற்றிலே யென்பான்.
(வாக்கி 30 : 17.)

23. பெற்றோர் வளர்த்தவரைத் தள்ளிவைத்து
பிள்ளைகள் கலியாணம் பெருகச்செய்து
பெற்று ருத்தரவின்றிப் பொருளெடுத்துப்
பெற்றவர்க்கு மெத்தனைவைக்காட்டாதவன். (வாக்கி. 28 : 24)

24. பெற்றோரேதாகிலுங் கேட்டுவினவப்
பிரத்தியுத்தாரஞ் சொல்லாப் பெருமடையன்
பெற்றோரைத் துடுக்காய்ப்பேசி வழக்கிற்
பெரிய சங்கத்திலு நிறுத்தினவன்.

25. பெற்றோரைச் சபித்துக் கிரியைகளைப்
பெரும் பிழையென்று கதும்பிச்சொல்லி
பெற்றோரைப்பட்டினியே போட்டடைத்தவன்
பெற்றோர்க்கு மிரங்காப் பஞ்சபாதகன். (வாக். 20 : 20,
5 மோ. 27 : 16.)

26. பெற்றோரை விரட்டியடித் ததட்டி
பெற்றோரை யுருட்டிபயமுறுத்தி
பெற்றோரைப் பாய்ந்து பிடித்துத் தள்ளி
பெற்றோரே கெட்டஃரே யென்றழைத்தவன். (1 மோ. 31:35)

27. பெற்றோரிடத்திற் குறை பிழைகளுற்றால்
பேணி வெளியிலதைத் தூற்றாமற்
பெற்றோர்க்குமன மொப்பிக் கீழ்படிந்து
பெற்றோர்கள் யோசனையைக் கேளாதான்.

28. பெற்றோர்களென்ற வுடனெழுந்திருந்து
பெற்றோர்கள் வந்தவுடன் தலைகுனிந்து
பெற்றோர் களுமைஞ் சொல்லச் சங்கையா யெண்ணிப்
பெற்றோரைக் கனஞ்செய்யாப் பெரும்பேயன்.

29. பெற்றோ ரடிக்கையினன்மை யென்றெண்ணிப்
பெற்றோரைக் கை தாங்கியவர்கள் செய்த
வற்றுச் சகாயங்கட்கு மாறுதவியாய்
மாளும் வரையுதவமன மற்றோன். (எபி. 13 : 17.)

30. பெற்றோர் மரிக்கையிலருகிருந்து
பேணி நல்லடக்கம் செய்தவர்கடன்
மற்றெதையுஞ் செலுத்தித் தாங்கி வருதல்
மகிமை தனக்கென்று மதியாதான்.

---

பலன்.

---

31. நன்றி சற்றுமில்லாத நாசகாலன்
நாதனின் கோபாக்கினைக்குமே தானவன்
அன்றுரைத்த கற்பனையை யசட்டை செய்தா
ளுண்டவனைத்தான் மறந்து வேண்டா மென்றான்.

32. தகப்பனு இவனென்று தலை தூலுக்கிச்
சட்டை யற்றுக் கானீட்டித் திட்டவுஞ் செய்வான்
மிகப்பெருந்துர் கோபமுண்டாகவே
வேணு மென்று தீங்குசெய்ய வாணுவங் கொள்வான்.

33. தகப்பனின் கற்பனைக்குச் சார்ந்து நடக்கச்
சட்ட மிருந்தாலும் பராபரனுக்
குகப்பிலாக் காரியஞ் செய்ய வொண்ணுதென்
றுணர்ந்து மகந்தை செய்த குணக்கேடன். (லூக்தா. 12 : 5)

34. சங்கைசெயிற் பெற்றூர்க்கு சலாக்கிய முண்டாந்
தங்குவனனேக் கால மங்களங்களா
யிங்கிதனிம்மையிலு நீடித்திருப்பா
னென்றவாக்குத் தத்தங்களை யெண்ணுதவன்.

35. பெலவீனத்திலவர்க் குதவிசெய்து
பிரியமெது களென்றறிந் திணங்கி
பலன்றா நன்மை வரப் பெற்றூருக்காய்ப்
பரனைப்பணிந்து செபம் பண்ணுதவன். (I தெல. 5:13,
மத். 10:37.)

36. பெற்றூர்கள் வேலை செய்த கூலியையிவன்
பிடுங்கித்தின்பான் சுமை யெடுங்களென்பான்
பெற்றூர் கண்டந்து தவிக்கையிலே
பெண்சாதி தானுமாய் வாகனஞ் செல்வான்.

37. பெற்றூர்களை தட்டிப் புத்தி சொல்கிறூர்
பெற்றூர் மரித்தாலே மெத்த நல்லது
நித்தம்னினைத்த நேரோடித்திரிய
நீங்கிறுற் போது மென்று நிந்தை செய்தவன்.

---

## பெற்றேர் முறை

---

38. பிள்ளைகளைப் பெற்றிவன்ற விக்க விட்டான்
பிரியமுடனவருக் குரிமை செய்யான்
சள்ளையென்று சொல்லுவன்றனித் திருப்பான்
முங்காமற் பிள்ளைகளையே சிவைதவன். (1 மோ. 31:14-15)

39. மனைவியின் மேல் மெத்த மனமகிழ்வான்
மைந்தர்களென்றூலுடன் சீறிவிழுவான்
றனமிருந்தாலும் புதைத்து வைப்பான்
றனையர்களுக்குதவச்சலியுந்தரான்.

40. பள்ளிக்கூடமிருந்தும் படிக்க வையான்
பாழிலே திரியப் பழக்குவிப்பான்
பிள்ளைகள் செபஞ்செய்கையி லோடவடிப்பான்
பித்தலாட்டஞ் செய்யவோ மெத்த மகிழ்வான்.

41. ஆத்துமத்துக் கெய்து நன்மை கெடுக்குமெல்லா
மறப்பகை யதானிம்மை மறுமைக்
கேற்றதைச் சினேகியாம லாய்ந்திளைஞரை
யிட்டபடி நடத்தி மெத்தப் பொசித்தோன். (1 தீமோ. 5:4.)

42. சத்துருக்களைச் சினேக மித்துருக்கள் போற்
சற்றுநினையாதவர் குணப்படுதலை
யெத்தனையு மெண்ணுமல் பிள்ளைகளினல்
வீடேற்ற நினையாக் கேடுகாலன்.

43. இந்தவிதமாக இருபலகையிலே
யெழுதின நாலாங் கற்பனையை
நிந்தையுற மீறினனென்று மோசே
மைந்தனர் சமூகத்தில் வாசித்தானே.
[ஆக 5-க்கு விருத்தத்தோடு 294.]

---

## 5-ம் கற்பனை.

---

### விருத்தம்.

தக்கநேரவர்க்குச் சரிப்படி ஞாயத்தீர்ப்பு
ரைக்கநீதாசனத்தி லுயர்கிறிஸ்தநிபனுற்றுர்
திக்குவாய் முனிவன் மோசே திக்கெல்லா மதிரப்பெற்ற
மிக்ககற்பனையோரைந்தை மிகைசெய்தோர்களை விண்டா
[னே.

---

# ஆத்துமக்கேடுதி.

1. பரமகிறிஸ்துமகராசாவே யிவன்
பாதகன் றன்போலொத்த மானிடரி
னருமையறியாது கொல்லச்சினமா
யாபத்திலுமிரங்காக் கோபமுற்ருன்.

2. ஆத்துமத்தின் சீரையாவலா யெண்ணி
யானபடி தன்னிலைமை செவ்வையாய்ச் செய்வோன்
தேற்றறவாய் மற்றவர்க்குந் தெரிய செய்வான்
சேர்ந்திவ்விரண்டையுந் தேடாதான்.

3. வயிற்றுக்கவலை ஒன்றே மிகுத்திவனும்
வாழ்நாளைப்போக்கி யாத்துமத்தின்சீர்
பயிலவுங் கேட்கவுந் தானுநினையான்
பட்சமுடன் மற்றவர்க ேடவுஞ் சொலான்.

4. வரங்களனேகமிவன் பெற்றிருந்தும் அதை
வழங்காமற் புதைத்து மூடிவைத்தவன்
பரங்களினன்மைக ளாத்துமத்துக்குப்
பயன்படத் தேடாத படுகொலைஞன். (மத். 5 : 9.)

5. கத்தியுரை பேசியடுத்தவரைக்
கண்டவுடன் சீறுவானுங் காரிப்பான்
கத்திகொண்டு வெட்டியுங்காயஞ் செய்யுங்
காய்மகாரமானுவமும் ஞாய மென்பான்.

6. நித்திய மரண மோர் நிமிஷத்திலே
நீடுமென்றறிந்தும் நேசம் வையான்
சத்தியப் பிரமாணத்தைச் சாங்கமாய்த் தள்ளி
தன்னயலானுக் குணர்வுசாற்ருதவன். (மத். 7 : 12.)

7. ஆகாதவன் குணமாகும் விதத்தை
யறிவித்து மோட்சவழிகாட்டாமற்
காமசாற் பிழைக்கப் போதியாமற்
றன்பவத்திற்காக இடம் பண்ணினன். (மத். 18 : 6-7)

8. மோசவுபதேச போதகங்களை
முக்கியமாய்ப்போதி வித்ததக்கிரமமாய்
நாசம் வந்து கெட்டழிய வகைபண்ணியே
நட்டமிகச்செய்த கொடுந்துட்டனிவன். (யோ. 10 : 8,
கலா. 5 : 12.)

9. அழியுஞ் சரீரத்திலாந்தமமே
அதிகமென்றறிந்து மாத்து மத்தைத்
தழையுநற் பாதையிற் செலுத்தாமற்
சதாநித்திய சாவிலே தள்ளிவிட்டவன். (வாக்கி. 23 : 13-14)

10. துன்மார்க்க மாதிரியைத் தொடர்ந்து பலர்
துயருறக்கெடச்செய்த அவதோஷி
சன்மார்க்கரைப் பவத்திற் றள்ளுதற்கோ
சடுத்தமாய்க் கட்டயமெடுத்துச் செய்வான்.
(1 கொரி. 8 : 10-12, ரோ. 14 : 15)

11. அடுத்தவன் றுர்குணத்தை யறவெறுத்தே
யருமையினேசிக்க வேண்டிய இவன்
படித்தவன் றுர்குணத்தை மெச்சிய பின்னுற்
பகைத்தவன் வீட்டையும் மருவருப்பான்.

12. கிட்டி கரையறிந்து தேரும்வழி
திட்டமாய்ச் சொல்லாமற்றிரிந் தலேந்தான்
ஒட்டி நல்ல போதகருக் குதவிசெய்யா
னுண்மை யுபதேசங்களுரைக்கச் செய்யான்.

## சரீரக் கேடு.

13. அடுத்தவன் வாழ்வு பொருமலுன்னி
யழியாளு இவனென்று சொல்லிக்
கொடுத்தவற் குதவாக் கேடுகாலக்
கொலைபாதகமா பழிகாரன். மத். (25 : 43, கலா. 5 : 21.)

14. இக்கட்டு நேரத்திலுதவாம
லே, ழெட்டு குற்றங்களெடுத்துரைத்துத்
தக்கபடி பசியை யாற்றுமற்
றன்ளி வீட்டிலில்லை யென்ற சண்டாளன். (யாக். 2 : 13.)

15. ஒப்புரவாகாமற் பகையோடேயிவ
னுறக்கியொடுக்கஞ் செய்த கொலைகாரன்
றப்பிதத்தி லடுத்தவர்க் காபத்துர்ற்
சந்தோஷப்பட்டு தன் சமத்துரைத்தான்.
(வாக்கி. 24 : 17-18, கொளோ. 3 : 12)

16. சத்துருவானாலும் பசியாற்றித்
தன்னைப் போனேசியாச் சதிகாரன்
மெத்தவும் மிகுந்த பஞ்சமுண்டாக இவன்
விற்கிரய நெல்லைக்கட்டி வைத்திருந்தான். (வாக்கி. 11 : 29
லூக். 6 : 35-36.)

17. பற்கடித்துப் பார்த்து பயமுறுத்திப்
பராபரன் சாயலான முகத்திற்றுப்பி
சொற்பழித்துத் தூஷித்துச் சீச்சீ யென்று
சொல்லியுங் கெடச்சபித்த கொலைகாரன். (மத். 5 : 22,
1 யோ. 3 : 15)

18. கொன்றுபோட வல்லமை யொன்றிருந்தாற்
குதித்துக் குதித் தெலாரைக் கொல்லவே செய்வான்.
வென்றி யரசாக்கினைக் கஞ்சிமிகவே யிவன்
மிக்கமாய்ச் சபித்து வைதிலச்சை கெட்டவன்.

19. ஆங்காரம் பொங்கிக் கொலை செய்ததா
யமைப்பித்து நடத்தினேன் மெய்யிவனென்று
நீங்காத பழியவன் மேற்சுமத்தி
நெட்டேரச் சபையிலு நிறுத்தினவன். (யோ. 8 : 44 ;
5 மோ. 19 16-20.)

20. அஞ்ஞானமாய்க் கொலை பாதகத்தி
னசுவையா லொருவனைத் தூக்குதற்கு
மெஞ்ஞாய மறிந்தும் பேசியவனை
விடுவிக்க மன மற்றக் கொடுங்கொலைஞன். (அப். 3 : 15
வாக்கி. 24 : 11-12.)

21. அடுத்தவர்க் குதவு மரும் பொருளை
யாருக்கு முதவாவவ மாக்கிக்
கொடுத்துக் குடும்பத்தைத் தாங்காமற்
கொட்டியாய் விரட்டின கொலைகாரன்.

22. அடுத்தவன் செயலை யவமாக்கி
யடுத்தவன் கீர்த்தியை யவமாக்கி
யடுத்தவன் போதகம் பாடல்களை
யருவருத்தட மாயறப் பகைத்தான். (சங். 52 : 4)

33. வஸ்திரங்கள் பாத்திரங்கள் மற்றுமெதையும்
வாய்மையாய்ச் சுத்தஞ்செய மனமற்றான்
மெத்தவுஞ் சோம்பிய வசுத்தமாய்
வியாதியிற்கிடந்து வருத்தப்பட்டான்.

## வியாதி தழும்பு.

24. வியாதியிற் கிடந்தவனைப் பாராமற்போய்
வியாதியிற் பக்குவங்களுஞ் செய்யாதவன்
வியாதிக்காரனென்றவுடன் முகங்கோணி
வியாதிதனக் கெய்தா தென்றெண்ணி யிருந்தான்.
(மத். 5 : 43-44.)

25. வியாதி வரும்படியாய விழ்தந்தந்து
வியாதிக்கென்றப் பஞ்சுட்டு நஞ்சுகலந்து
வியாதிக்கே தானதுகளை விற்றுமருட்டி
வியாதிக் குழுதவா விஷகாலன்.

26. வியாதியாலிக் கட்டுப்படுவரை
விசாரியாதிருந்த நாசகாலன்
வியாதி வரும்படியாய் வேலை வாங்கி
வியாதியிற் கூலிதர எண்ணுதவன்.

27. மெத்தன வில்லாத வீண்கலகன்
வீழுந்தவனைத் தூக்கியெடுத் தாற்றுதவன்
சற்று சில ரகசியஞ் சாற்றுவது போற்
தனிப் புறக்குத்திக்கொன்ற சண்டாளன். (2 சாமு. 3 : 37

28. வீண் காரியங்களுக்குங் காவலில் வைப்பான்.
மேலணிந் தநகைகளைப் பறித்துக்கொண்டு
கண்காணுமற் தூரத்திலவதி செய்தான்.
காட்டிற் றெரியாமற் குத்தியோடினன்.

29. பெற்றூர் பெரியார் சகோதரரைப்
பிடித்துக் கழுத்தை யறுத்திடத் தூண்டினவன்
சற்றுகிலுந் தனக்கு மிரங்காமற்
றன்னையுங் கொன்று கொண்ட தடிமடையன்.

30. ஆக்கவு மழிக்கவும் வல்லமையுள்ள
அருபனின் சித்தப்படி நடவாமல்
தாக்கவுங் கொல்லவு மடி விக்கவுந்
தானே யதிகாரியென நினைத்தோன். (1 மோ. 9 : 6

31. காலைவா மாலைவா வென்றலைக்கழித்துக்
கால் கடுத்துத் தொய்யவாசை காட்டி
மாலாகிவருமென நம்புசமைய
மறுத்தில்லையென்றவன் கொலைஞன். (லூக். 6 : 35.

## அவதிப் பலி.

32. கங்கையிற் புண்ணிய மென்று
கைக்குழந்தையைக்கூட ஆற்றிலே விட்டான்
கங்கையினூற் பெற்றவரைப் பெருவெள்ளத்திற்
றள்ளிவிட்டு சொற்கஞ் சேர்ந்தார்களென்றான்.

33. உடன்கட்டையேறி யுயிரை விட்டா
லுடனே மோட்சமென் றெழுதி வைத்தான்
கடமையென்றோடிக் காவேரியிற்
காணாமல் விழுந்த மதிகேடன்

34. வைகுண்ட மடத்திற்றிருவையாற்றில்
மக்களைப் படுக்கையிற் போட்டு விட்டு
கைகண்ட மோச்சமெனப் பிதற்றிக்
காணாமல் வாழ்நாளிற் கக்கிஷப்பட்டான்.

35. பிள்ளைகளை முதலைக்கு நேர்ந்துகொண்டு
பெரிய *குளங்கடலில மிழ்த்திவிட்டா
னுள்ளபடி மோட்சம் லெபிக்குமென்றே
யூராரைப் பலிசெய்ய வுன்னினவன்.

36. பிள்ளைகளை விலைக்கு வாங்கிவந்து
பெரிய மாகாளிக்குப் பலிகொடுத்துத்
தள்ளியுனனி மோட்சஞ்சுதந்தரிக்க
சுவாமி கிருபை செய்யுமென வெண்ணினான்.

37. தேரோட்டி வித்தவன் தேர்வரவே
செடில்குத்தியாடி யுயிரை விட்டான்
தேருருளை முன் விழுந்து நண்ட பிண்டலாய்ச்
சீவன் விட்டு மடிந்ததீபாவி.

## கோடேமை.

38. வீட்டைக் கொழுத்திவிட்ட கொலைகாரன்
வீட்டைப் பிரித்துவிட்ட சதிகாரன்.
வீட்டிற் பதிவிருந்த வினைகாரன்.
வீட்டை யிடித்துவிட்ட குடிகேடன்.

39. வீட்டாருக் கன்பு செய்யப் பகை நிறைந்தான்
வீட்டாரைக் கோட்டி கொள்ளக் கேட்டை நினைத்தான்
வீட்டாரை நாட்டாரைச் சேட்டைகள் செய்து
மேவுஞ் சமாதானமறக் கெடுத்தான்.

## வகை மோசம்.

40. பாதையில் மேடென்றும் பள்ளமென்றும்
பயனையுணர்த்தாமல் மறைத்து வைத்து
சாதுவாய்க் காண்பிவித்து தப்பிதத்தில்
தள்ளிவிட்ட பாதகக்கள்ள விடும்பன்.

41. பாதையிற்பள்ளம் பறித்துப்பகிடி செய்தான்
பாதையில் முள் மறைத்துப் பரப்பி வைத்தான்.
பாதையிற் கடிக்குநாய் பலவளர்த்துப்
பாதையை விட்டவரைப் பிசகச்செய்தான்.

42. பாதையிற் பயமுறுத்திப் பழுக்குப்பழி
வாதை செய்ய மனமென்றுவைது நிந்தித்தான்
பாதையிற் குறுக்கடைத்து வழியை விடான் சீவ
பாதையின் வழிவகையைப் போதிவியான். (லூக். 19:10.
ரோ. 7:22.)

43. பாதையிற் கூட்டி வந்து மோசஞ் செய்தான்
பாதையில் விட்டோடி சூது செய்தான்
பாதையை யறியவொட்டாமற் பாதகஞ் செய்து
பாதையோடே போனவனைப் பழிசுமத்தினான்.

44. பாதையிலடுத்தவனை யடித்து விட்டான்
பாதையிற் கல்லாலேதலை யுடைத்தான்
பாதைகாட்டிப் போதிவித்த மாதவரைப்
பழித்துத் தூஷித்துக் கழுத்தறுத்தான்.

45. பாதரட்சை வாராலே யடித்துதைத்தான்
பாவியிவன் கெர்ப்பம் விழமருந்து தந்தான்
பாதுகாக்கும் தேவனைச் சற்றுநினையான்
பாடைகட்டிப் போடுவேனென்று ஒடியஞ் சொன்னன்.

46. மலையிலே கொண்டு போயுருட்டி விட்டான்.
வலையிலுஞ் சிக்கவைத்து மாட்டி விட்டா
னலையிலே தள்ளியலற வைத்தா
னழலிலும் வேகவைத்த ஆகாத்தியன்.

47. இந்த விதமாகப் பத்துக் கற்பனையிலே
ஐந்தாங் கற்பனையை முழுதாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனர் சமுகத்திலே வாசித்தானே.
(ஆக விருத்தத்தோடு. 342)

## 6-ம் கற்பனை.

### விருத்தம்.

கேருபீன் சேராபீன்கள் கீர்த்தனப் புகழ்ச்சி கூற
பாருந்தத் தளிக்க யேசு பாத்திபன் ஞாயங்கேட்க
வீரமாய் முனிவன் மோசே யைந்து கற்பனையோராறிற்
சோர மூர்க்கத்திலுற்றத் தொடர்பவமெடுத் துரைத்தான்.

### விபசாரம்.

1. ஆதியில் மனுடரையாணும் பெண்ணுமா
யமைத்த கிறிஸ் தேசு ராசமகிபா
தீது விபசாரச் சிற்றின்பரு யிவன்
திரிந்தவனக் கிரம நிறைந்தவனே.

2. பரிசுத்த வஸ்துனது சிருட்டியிவன்
பாதகஞ்செய் துனையவசுத்தனுய்த்
திரமற்ற விபசாரத் தனத்திற்
திரிந்துனதாலயத்தை யிடித்து விட்டான்.
(2 கொரி. 6 : 17. 1 பேது. 2 : 11.)

3. விபசாரத் தனத்திற் கொலைகளவு
மிருந்த பொய்யுண்டாகு மென்றறிந்துந்
தபசாரம் பஞ்செய்குவன் போற்
றரித்து மதக்கிரம மிகுத்துச் செய்தான்.
(வாக்கியம். 6 : 32-33.)

4. ஒருத்தருக் கொருத்தருடன் படிக்கை
யுள்ளபடி யுண்மையாய்ச் செய்திருந்து
சிரித்து விளையாட்டாய்ச் சிற்றின்பமே
செய்தவன் மற்றின்பம் வேண்டாதான். (எபி. 13 : 4)

5. இதையத்திலும் பகையாய் மனையாளை
யிடும்புடன் தள்ளிவிட்ட விபசாரன்
மதத்துட தன்னுடலைத் தானிடிக்க
வலிய பவங்கள்செய்து வாடினவன்.

6. தன்மனையைத் தள்ளத்தகுதியற்றுந்
தள்ளுதலின் சீட்டைத்தந்து பிரித்தான்
தன் மனையை வீட்டிற் றனித்திறுத்தி பிறர்
தன் மனையைக்காதலித்த சதிகாரன். (மத். 19 : 6.
வாக். 6 : 27-29.)

7. பெண்டாட்டி தன்னைவிட்டோடச் செய்தான்
பெண்டாட்டியைப் பிரிக்க ஞாயஞ்சொன்னுன்
பெண்டாட்டி யிருக்கையிற் பிறர் மனையைப்
பெண்டாக வைத்திருந்த சண்டாளன். (8 மோ. 20 : 10.)

8. பெண்டாட்டி சமைத்தசோறு தின்பான்
பீராய்ந்த பணமெல்லாம் வேசிக்கென்பான்
தொண்டாக விருந்து வேசிவீட்டில்
சூதாடி நாட்கழித்த சோம்பேறி.

9. பெண்டாட்டி கழுத்திற்றாலியும் வையான்
பெண்டாட்டி நகைகளை வேசிக்கீந்தான்
பெண்டாட்டியழுது மனதிரங்கான்
பெண்டாட்டி திண்டாட விட்டவம்பன்.

10. மற்றொருவன் பெண்சாதி தேடிப்போவான்
வழி நரகத்துக் கல்லாலிம்மையிலும்
விற்றமாடடி படுந்தன்மையாக
மேதினியிலீரல் முற்றும் பிளக்கப்பட்டான். (வாக்கி. 7 : 23.)

11. மணஞ் செய்யப் பொய் வாக்குத்தத்தஞ் செய்து
மருவிக்கலந்திருந்து மறுத்து விட்டான்
குணந்தப்பி வெறித்து மிகுத்துத் தின்று
கோலமிஞ்சி மோகவெறியாசை மிகுத்தான்.
(வாக். 23 : 29-33. 1 பேது. 4 :3.)

---

## அசுத்தம்.

---

12. இருதய சுத்த மெள்ளளவு
மில்லாத பாதகவே சிக்கள்ளன்
கரிசனை கன்னிமேல் வைத்தளவு
கடவுளில் வையாக்கொடு மனத்தான். (1 தெச. 4 : 5.
2 கொரி. 7 : 1. மத். 5 : 8.)

13. வைப்பாட்டி வைத்திருந்து தன் மாதிரி
மற்றவர்க்குக் காட்டி வேசி வீட்டில்
தப்பாமற் றங்கிதன் வீட்டிலுஞ்
சகல பவங்களுக்குமிடங் கொடுத்தான். (வாக். 10 : 16.)

14. சுவாப அனுபோகந் தப்பிநடந்தான்
சுத்தவவலட்சணத்திற் புணர்ச்சி
யவாவுடனுண் புணர்ச்சி யருவருப்பு
மடங்காமோக வெறிப் பேராசையான். (1 கொரி. 6 : 9.)

15. சிற்றின்பப் பேச்சுகளைப் பேசினவன்
சிற்றின்பப் பாடல்களைச் செப்பினவன்
சிற்றின்ப படங்களை வேடிக்கையைச்
சிற்றின்ப முண்டாகப் பார்த்திருந்தான். (எபே. 5 : 3-4.)

16. சிற்றின்பக் கதைகளை யெழுதி வைத்தான்
சிற்றின்ப லீலைகளை வரைந்து வைத்தான்
சிற்றின்பப் புஸ்தகங்கள் சேர்த்து வைத்தான்
சிற்றின்ப வுல்லாச மோகவெறியான்.

17. சிற்றின்ப நினைவே சொற்பனமாஞ்
சிற்றின்ப செய்கை விளையாட்டாஞ்
சிற்றின்பப் பற்றுதலே மகிழ்சியென்று
சிற்றின்ப மற்றவர்க்குந் தெரியச்செய்வான்.

18. சிற்றின்ப மிகக் குடித்திருப்பான்
சிற்றின்பந்தாங்க மிகுத்து:தின்பான்
சிற்றின் பலாகிரிக்குத் தேவையான
சேனைவித எத்தனங்கள் கையாடினான். (ரோமர். 13 : 13.)

19. மோகாசை யுண்டாக அலங்கரிப்பான்
மோகாசை வசைமொழி மகிழ்ந்து சொல்வான்
மோகாசை காட்டி மூர்க்கங் கொள்வான்
மோகாசை மயக்கத்தில் விழுந்த பொலான். (மத். 14 : 6.)

20 அழுக்குள்ள பாவங்கண் டனுபவித்துப்பினும்
அலகைக்காளாய்ப் போயலைந்தான்
வழுக்குள காமவிகாரங்களை
மட்டோடே விட்டிடாக் கெட்ட முரடன். (எபேசி. 5 : 11.)

## வேசியின் பலன்.

21. வேசியின்பாதை நரகத்துக்கு
மேவு தென்றறியா விபசாரன்
மோசமாய் மாங்கிஷமாத்துமமு
முழுவதுமழிய வழியதுவே. (வாக். 7 : 26-27.)

22. வேசித்தனஞ்செய்ய உதவி செய்தான்
வீணை மோகாசைக் கிடங்கொடுத்தான்
மோசமாய்ச் சோம்பலில் முழுகினவன்
முற்றிலு மழுக்குறைந்த சிற்றின்பவான்.

23. வேசி கண்டனஞ் செய்யப் பார்த்துருகி
வேசியைப் போற்றன் வேஷமாறிக் கொண்டான்
வேசி நிணைப்பெண்ணுளு மிகுத்திருந்தான்
வேசியைத் தேவதாசி யென்ருன். (1 கொரி. 6: 15.)

24. வேசிமேல் விக்கிரகமாசை யென்ருன்
வேசியைப் பூசையிலே யாட்டி வைத்தான்
வேசிக்குப் பொட்டுக்கட்டச் செலவு செய்தான்.
வேசிக்காய்க் கோவிலுக்குப் போய்வருவான்.

25. வேசியுடன் கூட அவதரித்து
மேலான தெய்வமே வந்ததென்பான்
மோசமாய் மற்றவரைக் கெடுக்க வெண்ணி
மோக சரித்திரத்தை வேதமென்பான்.

## அக்கியான விக்கிரக துன்மார்க்கம்.

26. திருவாரூரில் வேசியிடமாய்த்
தெய்வமே தூது போனதென்பான்
பிரமாதன் மகளைத்தான் புணரப்
பிரமத்திகொண்டிருந்தானெனச் சொலுவான்.

27. வேசியை யம்மணத்தோ டிருத்தியவன்
மேலாசை மையல்கொண்டு சத்திபூசை
கூசாமற்செய்த கொடுங்தோஷி
கூத்தாடி யிஸ்திரீயைச் சத்தியென்பான்.

28. வேசியோடே கோகரணம் வீற்றிருந்து
விழித்திருந்தாலதே நன்மை யென்முன்
வேசித்தரிசன மேன்மையென்று
வேசியைப்புகழ்ந்து வினைபுரிந்தான்.

29. இந்திரன் கௌதமரிஷி மனையை
யெடுத்தனன் துரோபதையை வருக்குந்
தந்திரமனையாள் பத்தினியாந்
தன்மனைவி மற்றிடத்திற்சாரச் செய்தான்.

30. பிச்சை யெடுத்தாண்டி போற்றிரிந்தலைந்து
பெண்களைச் சோரஞ்செய்த சிவனொருநாள்
லச்சைகெட விஷ்டுணுவை மருவினதால்
ஈங்கிஷையிலையனுர் பிறந்த தென்பான்.

31. அண்ணுமலையர் வண்ணுத்தியை
யாரியமாலையைக் காத்தானுந்
திண்ணமாகச் சிறையெடுத்த
செய்தியைக்கேட்டுக் கெட்டலைந்தவன்.

32. பழனியாண்டவன் சிறையென்று
பத்தினியைக் கணவனை விட்டுப்பிரித்து
கிழவியாய்ப் போனபின் விரட்டி விட்ட
கேடுகாலக் கொடிய விடபுருடன். (வாக். 6 : 32-33.)

33. காமன் பண்டிகை ரதியென்று
காலாந்திரக் கோலச்சிற் றின்பனுய்ச்
சாமம் விழித்து வெறித்துதுரத்தி
சக்கந்தப் பாட்டுகளைப் பாடினவன்.

34. விட்டுணு சலந்திரன் மனைவியொடு
வேஷமாறி கள்ளத்தனமாய் மருவி
விட்டதினாற் சாபத்தைப் பெற்றிராமனாய்
மேவித்தன் மனைவியை யிழந்ததென்பான்.

35. விட்டுணு வினடக்கை செய்கை யெல்லாம்
விபசாரமிருத்த கொடூரம்
பட்டணவப் பார்வதியிளையமகன்
பாவி யிவ்வேசிக்குத் தலைவனென்பான்.

36. அசுரர் கடிருப்பாற்கடல்கடைய
அவர்களை மோகத்தில் மோசஞ்செய்ய
நிசமாய்ப் பெண்போலுருவெடுத்து
நின்றலைந்த விட்டுணுவைத்தெண்டஞ் செய்தான்.

37. பதினாயிர மிஸ்திரிகளைப்
பலபல வேசியரைவைத்திருந்து
மதமாய்த் துலுக்கநாச்சியையும்
வைத்திருந்த ரெங்கனை வணங்கினவன்.

38. ரங்கனாதர்க்குப் பிரியமென்று பல
இஸ்திரிகள் கர்ப்பமடைய யாண்டிகட்கு
பொங்கி யுண்டவருடன் விபசரிக்கப்
பொய்க்கதையைக் கட்டிவிட்ட அக்கிரமன்

39. வழிச்சுக்காட்டி யம்மன்முனே
வஸ்திரத்தை யவிழ்த்துக் காட்டாவிட்டால்
கழிச்சலேவு லெபிக்குமென்று
கட்டிவைத்த குருட்டுக் கசுமாலன்.

40. திருப்பதி ரங்கநாதரிஸ்திரிகளை
சிறையெடுத்தவர்களைப் பங்கு போட்டு
கருப்பங்களழித்து வைத்திருந்துங்
கடைமுடி கைவிட்ட காலாந்திரன்.

41. பெரியபாளைய மாரிகோவில்
பெண்களு மாண்களு நிருவாணமாய்த்
திரியச்செய்தான் சீரங்கத்திற்
றேர்களிலிலைகளை யெழுதி வைத்தான்.

42. வள்ளியம்மை நாடகத்தின் சிற்றின்பத்தை
வாய்மை யென்றெண்ணிப் பார்த்திருந்தான்
பிள்ளைகட்குப் பொல்லா நாடகங்களைப்
பித்திலாட்டக காமநூலைப் படிப்பித்தவன்.

43. விக்கிரகங்களையாணும் பெண்ணுமாய்
விசித்திர ரூபாக அலங்கரித்தான்
அக்கிரமஞ் செய்யும் பாவனையா
யறையிலடைத்து வைத்த வாகாத்தியன்.

44. மலையாளத்தேச சிலதிக்கிலே
வாழ்க்கைப்பட்ட கன்னியர்கள் பிராமணனால்
தலையாய்க் கற்பழிக்கப் பட்டதாலற்
சாமிக்குவந்த தென்றதடி மடையன்.

45. விட்டுணு தன்மனையைச் சுமந்தலைந்தான்
விதியெழுதும் பிரமா வாயிற் பொதிந்தான்
கெட்டலைந்த சிவனேதலையிலென்பான் றுர்
கிரியை செய்தோரையுந் தேவனென்பான்.

46. திருவனந்த புரத்திற் பற்பனுதர்
சேரவே யம்மனிடஞ் செல்லுஞ்சமைய
மொருவன் வந்தம்மன் தூரஸ்திரி
யுதாவாவென்று சொலுங்கதை கட்டினன்.

47. திருவையாற்றிலா வணத்தாள்
செய்கலியாண முகூர்த்தத்திலே
வருஷந் தோறுந் தும்மற்றடை
வந்ததென் றலப்பி, சந்தோஷிப்பான்.

48. காமோசின் மோளோக்கி னருவருப்பைக்
காமியாய் நினைத்தி லிங்கத்தையும்
நேம நிஷ்டைகள் மிஞ்சி கும்பிடச் செய்தான்
நித்திய சிற்றின்ப நினைப்புடையான்.

49. இந்த விதமாகப் பத்துக் கற்பனையிலே
விந்தை யாயாறுங் கற்பனையை
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனூர் சமுகத்தில் வாசித்தானே.

[ஆக வகை 7 க்கு விருத்தத்தோடு 392.]

---

## 7-ம் கற்பனை.

### விருத்தம்.

சூரியன் கறுப்பாய மாறத் தோன்றும் நட்சத்திரங்கள்
சீரியைப்பிரவை குன்றத் திங்களுமடங்கி தேவ
காரிய நீதி ஞாயக் கருத்தனங் கிறிஸ்து முன்னே
காரியமாய் மோசே யேழாங் கற்பனைக்கிடரெண் பித்தான்.

### களவுக்குக் காரணம்.

1. மேசியா இம்மானு வேலதிபாயிவன்
மேதினியிற் கொள்ளையிட்ட வினைகார
ஞசையாய் மற்றவர்கள் பொருள்திருடி வீ
ஞஸ்தியாய் வைத்திருந்த மோச காலன்.

2. செய்யுங் கடைமைகளைச் செய்யாமற்
செய்யாத காரியங்கள் தினஞ்செய்வா
னுய்யும் வகையிலே யென்றெண்ணி யுடனே
யூரிற்றிருட வெண்ணுஞ் சோர் மனத்தான்.

3. களஞ் செய்ய மானிடரை மதியாதான்
களவாய்த்தன் பெயரை மாற்றி மறுப்பா
னின பெந்தானவரைப் பெரியாரை
யிடருரைத் தெள்ளளவு மறியேனென்பான்

4. பிறர்தனைக் களஞ்செயப் பிரியங்கொள்வான்
பிறரையோசங்கை செய விருப்பமிலான்
பிறர்பெறும் பெயர்களை விருதுகளைப்
பித்திலாட்டமாய்த் தனக்குத் தக்குவிப்பான்.

5. அடுத்தவ ஞஸ்தியைக் கண்டவுடனே
யாங்காரமாய்க் காய்மகாரங் கொள்வான்
கொடுத்த பரப்பொருளை யெதிராக்கி
கொடுத்திலை தனக்கெனச் சடைத்துச் சொல்வான்.
(1 மோ. 26 : 16. மத். 20 : 11-21

6. கவடாய்ப் பேசிப் பொருள் பறிப்பான்
கவடாய் பேசப் பணங்கொடுப்பான்
கவடாய் யோசனை மனதி லெண்ணி
கவட்டை வெளிக்கு விடாக்கடுந்திருடன்.

7. ஏராளமான பொருளிருக்கையிலே
யெள்ளளவு மேழைகளை நினையாதான்
வாரா வினைகள் வந்து மனக்கடினன்
வாங்கியுமீயாத வலு திருடன்.

8. பொருள் மேலாசை கொளல் முழுத்திருட்டு
பொருளைக் கொடாதிருக்குங் கடன்றிருட்டு
பொருளைத் தனக்காக்கும் பொய் யோசனைப்
பொருளே திருட்டெனு மதியாதான். (1 கொரி. 6 : 9-10

9. அடுத்தவர்க் காபத்து நேர
மடுத்தவன் சாகுமதி தரணநேர
மெடுத்தவன் பொருளைத் தக்கி விக்க
எண்ணம் வைத்தலையுஞ் சீர்கேடன். (லூக். 10 : 30

10. பரிதானங்கள் கைக்கூலிப்
பணமே மிகுத்துச் சேர்த்து வைத்தான்
வரிகேட்போருக்கு இறை கொடுக்கான்
வரவுக்கு மிஞ்சிக் கடன் படுவான். (எசா. 1 : 23.)

---

## திருட்டு வியாபாரம்.

---

11. சொற்பப் பொருளைத் துணிகரமாய்த்
தொகையதிகஞ் சொல்லிக்கிரயஞ் செய்தா
னற்பவேலை செய்தாலு
மதிகங் கூலிவாங்கினவன்.

12. வேலைகள் செய்யப் பெலனிருந்தும்
வீணாய்ப் பிச்சை கேட்டலைந்தான்
சாலப் பணங்கள் மிகுத்திருந்தும்
தப்பாய்ச் சூதிற் செலவழித்தான்.

13. செல்லாப்பணங்கள் வழங்கினவன்
செல்லாப் பொருளை மறைத்துவிற்று
செல்லாப் பதரை நெல்லாகச்
செல்லும்படி செய்த கள்ளவாணி.

14. கொள்கிற மரக்கால் பெரிதாக
கொடுக்கிற அளவோ சிறிதாக
கள்ளப்படிக்கல் திராசுகளைக்
கவடாய் விதவிதம் வைத்திருந்தான். (5 மோ. 15 : 13-14)

15. பொருள் மிகுத்திருந்தும் வாங்கினதைப்
பொருந்தினபடி தாம் போக்குரைத்தான்
திரளாய் வேலை வாங்கினவன்
செப்பிய கூலியைச் செலுத்தாதான். (ஆமோஸ். 5 : 11.
5 மோ. 24 : 16-15.)

16. அஞ்ஞாய மாகிய வருமான
மஞ்ஞாய மாகிய விலைக்கிரய
மஞ்ஞாயக் குடிக்குக் காரணமா
யஞ்ஞாயஞ் செய்ய இடங்கொடுத்தான். (ஆமோஸ். 8
3 மோ. 25 : 16-

17. அஞ்ஞாய வட்டி வாங்கிறவ
னஞ்ஞாயக் கூலி பொருந்தினவ
னஞ்ஞாயத் தொழிலை நடத்தினவ
னஞ்ஞாய மெஞ்ஞாய மறியாதான். (2 மோ. 22 :
3 மோ. 25 : 35-36. எசா. 18 :

18. அஞ்ஞாயமாய் வரி வாங்கிறவ
னஞ்ஞாய யுத்தங்க ளாரம்பிக்கு
மஞ்ஞாய வரசனி னதிகார
மஞ்ஞாய வார்த்தையுங் கடுங்களவு. (நெகே. 5 : 11. ட
3 : 2

19. அடுத்தவ னிலத்தின் பயிர்வகைக
ளடங்கலை யழித்த ஆங்கார
னடுத்தவ ஞஸ்தி நிலங்களை யு
மபகரித் தாக்கலு மவகேடே.

20. இரவும் பகலு நித்திரையா
யிருந்திவன் சோம்பிற் றிரிந்தலைந்தான்
வரவுக்கு மிஞ்சிச் செலவுசெய்து
வலுபிரட்டியற்றுங் களவனிவன்.

21. வழக்காளிகளைக் காக்கவைத்தான்
வழக்காளிகட்குப் போக்குரைத்தான்
வழக்காளிகளிடம் பரிதானம்
வழங்கக் கலக்கியிழுத்து விட்டான்.

22. அடுத்தவன் பொருளைக் கண்டவுட
னடக்கமா யொழித்த வலுதிருடன்
கொடுத்தவன் கேட்க மனம் பொருந்தான்
கொண்டாலுங் கேட்டாலுங் கொடுக்காதான்.
(5 மோ. 22 : 1-3. யோபு. 20 : 18

23. திருடவே செய்யான் றிருடருக்கோ
செய்யும் வகைகள் காட்டி விப்பான்
குருடனிக ரறியான் போற்
கொண்டாலுந் தந்திர யோசனையான்.

24. திருடிச் சேர்த்த பொருளையெலாந்
தேவாலயத்திற் சேர்ப்ப னென்பான்
வருடந்தோறும் பட்ட கடன்
மறுத்திலை யென்பான் றருமஞ் செய்யான்.

25. திருடர் கூடத் திரிந்தலைந்தான்
றிருட்டுப் பொருளை வாங்கி விற்றான்
றிருட்டுக் காகித மெழுதிவிட்டுத்
திரமாய்ப் பொருளைச் சேர்த்து வைத்தான்.

26. திருட்டுப் பொருளிற் பங்கு பெற்றான்
றிருட்டுப் பிரட்டே படிப்பிவித்தான்
றிருடத் தெரியாப் பேரையெல்லாந்
திரமற்றோனென வெறுத்து விட்டான்.

27. திருட்டா லுலகிற் பொய்யாணை
சேதங் கொலையு மிகுத்ததுவே
பிரட்டாற் பரனை மறுதலிப்பான்
பெரியோன் றானெனப் பிரசங்கிப்பான்.

28. இரவிற்றிருடத் தூரப்போ
யிரவே திருடித் திரும்பவந்து
காலொரு வருக்குந் தெரியாமற்
கனவானாகத் திரிந்த பொலான்.

29. தனியாய்த் தின்று சுகித்திருப்பான்
றனியாய்த் திருடி யொளித்து வைப்பான்
தனியாய் வருவோர் வழிமறித்து
சருவமுங் கொள்ளை கொண்டவம்பன்.

## தொழிலாளிகள் சூது.

30. பொருளிற் சிலதை யபகரித்துப்
பொய்க்கணக் கெழுதி வைத்திருந்தான்
றரும ஏழைகள் பொருள்களிலுஞ்
சரிப்படி யெழுதும் பொய்க்கணக்கன். (எரே. 17 : 1

31. வஸ்திர மாடை சட்டைகளில்
வஞ்சகஞ் செய்த தொழிலாளி
உத்தமமாய்ப் பல பாண்டங்களி
லோட்டையைக் கலந்தவோர் வஞ்சன்.

32. பஞ்சகம் மாளர்பல தொழிலர்
வஞ்சகஞ்செய்த வலுதிருடர்
மிஞ்ச மிஞ்ச வேலைகள் செய்தாலும்
வினைகவடதிகச் சூதுகளே.

33. பொன்னையுருக்கிப் பித்தளையிற்
பொருத்திநன் னகைகளை யறக்கொடுத்தான்
என்னதா னன்மைகளைச் செய்தாலு
மிடும்பாய வஞ்சக மியற்றினவன்.

34. எளியவன் பொருளை வலியனிவ
னெடுத்த நியாயமா யொளித்து வைத்தா
னிளைஞரைப் பேதைகளை மோசஞ்செய்து தன்
இனத்தையுங் கொள்ளையிட்ட களவாணி. (வாக்கி. 22 : 

35. எஜமான் கண்முன் வேலை செய்வா
னில்லாதாகில் வேலை செயான்
பிசகா யிரவ லுடைமைகளைப்
பிய்த்தழுக் காக்கிக் கிழித்தெறிந்தான். (தீத்து. 2 : 9-

36. அடுத்தவன் வீட்டிற் பிறர் பொருளை
யவனறியாமற் போட்டு வைத்துக்
கெடுத்தவன் பெயரைத் தூற்றிவிடக்
கிருத்திரமஞ் செய்த புனைசுருட்டன்.

37. தூரச்சென்று பொருள் வாங்கத்
தொகை தாவென்று வாங்கிப்போய்ச்
சோரஞ் செய்து மறைந்தோடி
திட்டஞ் யலைந்த படுக்காளி.

38. பிறருக்கு நஷ்டம் வருமென்று
பிசகற எச்சரித் தறையாதான்
நிறைவுற வழிப்பறி பறித்துத்தின்று
நிதநித மலைந்த வலுதிருடன்.

39. நீதி செயப்பட எதிர்பார்ப்பா
னீதியைத் தான்செய்ய முறுமுறுப்பான்
போதகநேச மருவருப்பான்
பிறரையு நேசிக்கக் குறுகுறுப்பான்.

40. இந்த விதமாகப் பத்துகற்பனையிலே
ஏழாங் கற்பனையை முழுதாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனுர் சமுகத்தில் வாசித்தானே.

[ஆக வகை 8-க்கு விருத்தத்தோடு 432.]

---

## 8-ம் கற்பனை.

### விருத்தம்.

வானமும் புவியு மற்று மயங்கிடு முருபமெல்லா
மீனமாயடங்கி மங்கி யெழிலுயர் வானந்தோன்று
மாணவக் கடையுகத்தி லதிபனி யேசு முன்பாய்
ஞானகற்பனை யோரெட்டி னடக்கையைச் சொன்னான்
[மோசே.

## வீண் சந்தேகம்.

1. பூவுல கனைத்தையும் நக்கேட்கும்
பூபதி யேசுக் கிறிஸ்தையனே
தீவினையாய் மற்றவன்மேற் பொய்சாட்சியிவன்
செப்பினவன் றப்பறையை மெய்ப்பாக்கினேன்.

2. காரியத்தை யறியாம லசுவைகொண்டு
கவடாய்ச் சாட்சிசொன்ன படுக்காளி
வீக்கியமாய்ச் சொல்லுமவ கீர்த்தியெல்லா
மெய்யென்று நம்பி கோட்கேட்டான். (மத். 6 : 4.
சகரி. 7 : 10.)

3. முகாந்திர மில்லாமற் குற்றஞ்சாற்றி
முற்றிலுங் குடியன் றிருடனென்று
தகாதவனென அவன் வார்த்தைகளைத்
தப்பருத்தஞ்செய்த சண்டாளன். (1 சாமு. 1 : 13.
2 சாமு. 10 : 3.)

4. நினையாக்காரியத்தை மனதிலுன்னி
நிமித்த மிலாமற்பல கூட்டிச்சேர்த்து
சினமா யதட்டி கோரணியாய்ச்
சிந்தித் தலப்பின துன்மார்க்கன். (சங். 22 : 7-8.
வாக்கி. 6 : 12-13.)

5. மனதையுங் கிரியையு மறியாமல்
வம்பாக நிருணித்த பொய்ச்சாட்சி
கனமுள்ளோர் முகமாய்ச் சாட்சிசொல்லக்
கட்டுப்பாடியற்றின கெட்டமனிதன். (யொவா. 2 : 19-21,
5 மோசே. 16 : 19.)

6. காரியத்தை முற்றிலு மறியாமற்
கண்டவன்போற் சொன்ன சண்டாளன்
தீர வேயாய்ந்தோய்ந்து பாராமற்
றிடரென்று கட்டிவிட்ட பொய்ச்சாட்சி.

7. நன்மையைச் செய்கிறதைப் பார்த்திருந்து
நானென்ற ஆணவத்தைப்பாராட்டி
துன்மையாய்ச் செய்கிறனென நினைத்துத்
துரோகிப் பசாசையே பின்பற்றினன். (யோபு. 1 : 8-11.)

8. துன்பங் கணைவுகள் நஷ்டங்களைத்
தொடர்பாய்க் கண்டவுடன் தீர்ப்பாக
அன்பான பரன் செயலறியாமற்
ஆகாதபாவி யவனென நினைத்தான். (அப். 28 : 2-4,
லூக். 13 : 1-4.)

---

## நியாயத் தீர்ப்பு.

9. அற்பப் பொருளுக்கா யாவலாகி
யதிகப் பணத்துக்கு நாட்டம்வைத்து
கற்பனை கடந்துபொய் யுரைத்துத்தன்
கருத்தி னினைத்தபடி தீர்ப்புச்செய்தான்.

10. யாவருமவனைப் பகைத்தெதிர்க்க
யாவரு மவனைக் கருகருக்க
யாவருமவனற் கிரியைகளை
யழிக்கவுஞ் செய்த படுபொய்யன்.

11. வன்மம் பகையொடு நடுத்தீர்த்தால்
வாய்மையுமல்ல ஞாயமல்ல
சென்மப்பகையே பொய்யாகத்
தீவினைக்காளெனத் தீர்த்துவிட்டான். (1 கொரி. 4 : 5.
உரோ. 2 : 1-2.)

12. அடுத்தவன் றப்பிதத்தைப் பெரிதாக்கி
யற்பச் சிராயையோ மரமாக்கித்
தொடுத்தவன் செய்யாத பவங்களையுந்
தொகையாய்ப் பெருக்கின பொய்க்காரன். (லூக். 6 : 41.
யாக். 4 : 11.)

13. சினேகிதன் செய்த பவமற்பமென்று
சிந்தித்துத்தன் பவமறைத்து வைத்தா
னனேகரை வஸ்திரா பரணங்களில்
அடாமையா யெண்ணின பொய்ச்சாட்சி.

14. செய்வினை யுண்பினை யாரோடே
சேர்த்திக்கை யென்பதாய்க் கூர்ந்துபார்த்துப்
பொய்வினை யென்றே யசுவைப்பட்டுப்
பொல்லாங்காய்த் தீர்த்த பொய்ச்சாட்டி.

## பரியாச கோரணிகள்.

15. நங்கான சொற்களை யுரைக்கிறதும்
நகைப்பாய்ப் பகிடிகள் மொழிகிறதும்
வெங்கோபச் சேட்டைகளாய்த் தலைதுலுக்கி
மெய்போலே காட்டின பொய்ச்சாட்சி.

16. குற்றஞ் சாட்டப்படுஞ் சமையம்
குஞ்சிரிப்பால் மெய்போல வொப்பினவன்
மற்றும் பலரா திக்கத்துக்கிடராக
வாதுட னிங்கிஷை நடப்பித்தவன். (மத். 27 : 28-29.)

17. இதையத்திற் பகையானிறைந்திருந்து
மிங்கிதமான மொழிபேசி நகைப்பான்
இதமாய்ப் பொய்வாக்குத் தத்தங்களை
யியற்றுவே னென்றுசொன்ன பொய்க்காரன்.

## பொய் வாக்குத்தத்தம்.

18. மூலையில் மறைவாய்த் திட்டிவைது
முகமனுக் கண்ணெதிரே புகழ்ந்தேத்தி
வேலையிலுதவுவேனென்று சொல்லி
வீணாக நம்பச்செய்த பொய்காரன்.

19. அடுத்தவன் செத்து மடக்கத்திலே
யவமரியாதையைக் கிரியையினால்
தொடுத்த பொல்லாத அதக்கிரமன்
சுத்தாங்க மெய்பேசா பொய்ச்சாட்சி.

---

## பின் புறணி.

---

20. அடுத்தவனுமத்தை யவதூறு
யறிவித்துத் தூஷித்த சதிகாரன்
தொடுத்தநற் சத்தியத்தைப் பகைத்தவம்பன்
சொல்லும் பின்புறணியை நல்லதென்றான். (சங். 50 : 19-21
வாக். 17 : 4.)

21. தன்மனைவி தன்னினங்கள்சாற்றும் பொய்யைத்
தகாதெனக் கண்டியா சதிகாரன்
வன் மனதால்மாய மானிடரை
மட்டுமிஞ்சிப் புகழ்ந்த பொய்காரன்.

22. நல்லவனைப் பொல்லாதோனென்று சொல்லி
நற்கீர்த்தியை யவகீர்த்திசெய்து
வல்ல சமையத்தில் மோசஞ்செய்து
வாதாடிப் பேசின மோசக்காரன். (1 சாமு. 19 : 5.)

23. பேயுடமகனா யிருந்துகொண்டு
பேய்சொலும் பொய்வார்த்தைப் படித்துக்கொண்டு
பேயாகத் திரிந்த பேய்மாலன்
பித்திலாட்ட மெத்தச்செய்த கேடிகாலன்.

24. நற்குணவானுக்குப் பரிந்துகொண்டால்
நட்ட வருமென்றெண்ணுந் துட்டகுணத்தான்
சொற்குறை யாற்றுன்ப மனுபவிக்குஞ்
சுற்றத்தாரைப் பொறுமை கேளாதான். (வாக். 31 :8-9.
மத். 26 : 10.)

25. நாவை யடக்காத படுசீலன்
நம்பிக்கை யில்லாத கேடுகாலன்
கோபத்திற் கண்டபடி பேசுமிடக்கன்
கோணவலித்துரைக்கு மாணவப் பொய்யன்.

---

## அஞ்ஞான தேவதைகளின் பொய்.

---

26. பிரமா சிவன்முடி கண்டேனென்று
பித்திலாட்டப் பொய்சொல்லிப் புகழிழந்தான்
புருடர்க் குதவா தாழைமலர்
பொய்சொல்லிக் கெட்டதென்ற கதைகட்டினான்.

27. பொய்யான காவியங்கள் கட்டிவைத்தான்
பொய்சாட்சி விட்டுணுவுஞ் சொன்னதினால்
பொய்யான சூதாட்டம் வென்றேனென்று
போடிசமாய்ப் பார்வதியை: சிவன்கடிந்தான்.

28. தினைமா தின்றவுடன் விக்கலெடுத்து
சீவன்போகும் பாவனையாய் சுப்பிரமணியன்
வினையாய்க் குறத்தியை மோசஞ்செய்ய
வேண்டுமென்று பொய்சொன்னதை மெய்த்துக்கொண்டான்.

29. பொய்சொல்லி கோவிலைக்கட்டி வைத்தார்
புண்ணியமென்று சொன்ன புலைஞனிவன்
மெய்யாக அழகரின் சிலையிரவில்
வேட்டையாடி வந்ததென்று பொய்யுரைத்தான்.

30. ஐயனார் மண்குதிரை யேறிக்கொண்டே
யங்குமிங்குங் காடலைந்து வந்ததென்றான்
மெய்யாகப் பாணக்கங்குடிக்குமென்று
வேணமட்டுந் தான்குடிக்கப் பொய்பகர்ந்தான்.

31. சிவனுள மானிடர்க்கு நிகராக
செய்தபல விக்கிரகங்கள் கற்சிலைகள்
ஆவலாய் ருசித்து சகலத்தையு
மனுபவித் துண்டதென்ற முழுப்புளுகன்.

32. விக்கிரகக் கோவில்களி லிடிவிழுந்தால்
விக்கிரகந் தாங்கிற்றென்று போக்குச்சொன்னன்
சொக்கவாசலென்று பேர் வைத்துக்கொண்டு
துன்மார்க்க அக்கிரமப்பாதை திறந்தான்.

33. பிள்ளையார் சிரசுக்கு வதிலாக
பேச்சற்ற யானையின் தலையிணைந்த
எள்ளளவு மிசையாத கதைகட்டினன்
ஏகமாய்ப்பாம்பு தலையாயிர மென்முன்.

34. பாம்பு சுமக்குதாம் பூலோகக்தைப்
பசுங்கிளி சுமக்குதா மாறுமுகனை
வீம்பாக ஆலிலை விட்டுணுவை
மேவிச் சுமக்குதென்ற பொய்மொழிந்தான்.

35. இந்தவிதமாகப் பத்துக் கற்பனையிலே
எட்டாங்கற்பனையை முற்றாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தஞர் சமுகத்தில் வாசித்தானே.
[ஆக வகை 9-க்கு விருத்தத்தோடு 468.]

---

## 9-ம் கற்பனை.

### விருத்தம்.

வேதியர் முனிவர் விண்ணோர் மெய் விசுவாசர் சுத்த
நீதியாசனக் கிறிஸ்து நிமலன் முனிற்க மண்ணோர்
ஆதிகற்பனை யொன்பானி லறைந்ததற் கெதிராய்ச்செய்த
பாதகங்களை யெண்பித்தான் படபடப்பொடு சொல் மோசே.

# பிறன் வீடு.

1. வேதியர்க்கு மேலான போதகரே
விண்ணையு மண்ணையு நடுக்கேட்கும்
ஆதியானே சமேசியாவே இவன்
அடுத்தவன் வீடுவாயல் கெடஇச்சித்தான்

2. பிறர் நிலமனைத்துந் தனக்காகப்
பேதகஞ்செய்த சூதிடும்பன்
மறுவலவென்றோர் பங்கையெனும்
வசஞ் செய்துகொண்ட மதியீனன். (1 மோ. 26 : 19-21.)

3. சொந்தமென் ருசித்துப் பிறர்நிலத்தை
தொந்தமாய்க் காட்டி கேட்டலட்டி
நிந்தையாய்க் குற்றங்கள் சாட்டியவ
னிலத்தை யபகரித்த கலகக்குணன். (ராசா. 21 : 9-10.)

4. சிலநாட்கெடு சொலிப் போக்குரைத்து
சேர்த்தவ னிலத்தை யாக்கிரமித்தான்
பலபல நஷ்டம் பெருகச்செய்து
பாழா யவனில மாக்கினவன். (ஏரே. 5 : 26-27.)

5. அயல் தேசங்களை ஞாயமின்றி
யாக்கிரமித்துப் போர் பொருதி
செயமாய் மற்றோரினி ராச்சியத்தைச்
சிக்கெனச் சேர்த்திசைத்த பேராசையான்.
(ஞாயா. 18 : 11-13. ஞாயா. 9 : 45.)

6. மூந்தின எல்லையைத் தாண்டிவந்து
முழுவதும் மொத்திக்கட்டும் பேராசையான்
தந்திரஞ்சூது மனதிலெண்ணுந்
தப்பான இச்சிப்பே பெரும்பவமே. (5 மோ. 19 : 14.
வாக். 23 : 10.)

7. நிலம் வயல் தனக்கே சொந்தமாகு
நிமித்தந்தன் பிறனையுங் கொன்றுபோட்டான்
சிலபணங் கொடுத்ததை யொத்திவாங்கிச்
சேர்ந்த தொகைக்கு நிலமீடாக்கினுன். (1:ராசா. 21 : 15-16
எசா. 5 : 8.)

8. விளைவயல் பார்த்துப் பணம்பறிக்க
விருப்பமாய்க்கேட்டுங் கொடாத நிமித்தம்
உளவாய்த் தண்ணீரைத் திறந்து நஷ்டம்
உறச்செய்த பேராசைக் கொடும்பவத்தான். (மிகா. 2 : 1-2.)

9. அடுத்தவன் வயலில் மாட்டையும்விட்
டழித்தவ னிலத்தைப் பாழாக்கினுன்
கெடுத்தவன் தோப்பை மனைநிலத்தைக்
கிணற்றையுந் தூர்த்துவிட்ட கேடுகாலன். (1மோ.26:14-15,
2 மோ. 22 : 5-6.)

10. அடுத்தவன் வீட்டிற் குடியிருந்து
அவனை யடுத்தவூருக் ககற்றச்செய்து
சடுத்தமாய் வீட்டைவிட்டு போகேனென்று
சங்கிடமாய் ஞாயசபைக் கிழுத்துவிட்டான்.

---

## அஞ்ஞான தேவர்கள் நடக்கை.

---

11. சக்கரவர்த்தி மாவலியை மூன்றடிமண்
தரக்கெஞ்சி விட்டுணு கேட்டபின்னர்
தக்கபடி யீரடியா யாவுமளந்து
தலையிலுங் கால்வைத்து தாக்கினனும்.

12. இரணி யாக்கன் பூலோகத்தை
யிடுக்கண் வருத்திவிக்கப் பாயாகவே
திரமாய்ச் சுருட்டி சமுத்திரத்தில்
திகைக்க வொளித்த வம்புக்கதை கட்டினுன்.

13. விட்டுணுவின் பத்தவ தாரங்களில்
வீணைமோகினி வேஷ மினமுங்
கெட்டுறைந்த ருத்திரன் கதைகளிலே
கீர்த்தியற்றுப் பிறர்பொரு ளிச்சித்ததே

---

## விக்கிரக இருப்பு.

14. அட்டதிசை யடங்காப் பரப்பொருளை
யகற்றி நிலங்களெந்தைப் பலதெய்வங்கள்
சட்டமாயாளுதென்று சாலஞ் செய்து
சாமி யொருத்தரையே சாராதவன்.

15. பூமி முழுவதையுஞ் சாம்தந்தும்
பூமியை பங்குபங்காய் வேறுதெய்வம்
நேமுக மாளுதென்று கட்டிவைத்தான்
நிலங்களைத் தலங்களைத் திசைகளையும்.

16. திக்குப் பாலகர்பலர் உண்டென்றான்
சிவன்மகன் சுப்பிரமணியர் மலைத்தலைவர்
மூக்கியமாய்ப் பாலைநிலங் காளியென்பான்
முல்லைநிலம் விட்டுணு வுமையனுருமே

17. மருத நிலைத்தலைவ னிந்திரனும்
வயலிலா நெய்தலுக்கோ வருணனென்பான்
கருதங் குளங்கரைக்கும் பிள்ளையாராம்
கருநாகப் பாம்புகளும் திறமுளதாம்.

18. வடக்கிற்கு போன சித்திரரேகை
வடமேற்கில் வாயு அஞ்சனதேவி
வடகீழ் திசையி லீசானன்
மங்கையராம் பார்வதியைத் தேவியென்பான்.

## அவாவு.

1. சகலமுமறிந்த சதாபதியே யிவன்
சமஸ்த கற்பனைகளை மீறிவிட்டான்
தகையாய்ப் பிறர்மனை தனக்குறவே
தப்பாக இச்சித்த சதிகாரன்.

2. பேராசையாக அயல்மனையை இவன்
பிரியத்தோடே பார்த்ததினுல்
தீராத நஞ்சையவட் குணர்த்தி
தெரிகெடச் செய்த பேராசையான். (மத். 23 : 25.)

3 வெட்க மிலாம விச்சித்து
வினை பலசெய்த கடுங்கொடியன்
திக்கிலாத ஏழைகளைப் பேதைகளை
திசைகெட ஓட்டிவிட்ட வசைகாரன்.

4. இச்சை மிகுக்க லட்சையுற
இடக்காய்க் காட்டுஞ் சேட்டையினுற்
துர்ச்சனமாகப் பிறர் மனையை
சுறுக்காய்த் தன்பா லாக்கினுன். (2 பேது. 1, 5 : 6-7.)

5. பார்வையிற் சாதுவா யமர்ந்திருந்து
பத்தியற் றெப்போது மிருதயத்தில்
கோர்வை யவாவே மிகவாகி
குற்றமா யிச்சித்த கொடும்பாவி

6 வழியி னதியிற் குளக்கரையிற்
வசனஞ்சொல் தேவால யத்தினிலும்
வழி நோக்கவே பிறர்மனையை
வேண்டுமென் றிச்சித்த காவாலி. (மத். 5 : 28.)

7. ஆலயத்துக் குள்ளாக வேசிகளை
யாட்டிவித் திச்சித்து கோட்டிகொண்டான்
வாலைப் பிராய மாதர்கள்மேல்
மனதை முழுதும்வைத் தலைந்தபொலான்.

## பிறர் பொருளிச்சித்தல்.

8. நயமா யடுத்தவன் வேலையினை
ஞாயமின்றித் தன்னிடத்திற் சேர்த்துக்கொண்டான்
ஐயையோ வெனவவ னலறும்படி
யடுத்தவன் வேலையினை மறைத்துவைத்தான்.

9. மற்றவன் வேலைக்காரியையு
வன்கண்ணு யோட்டிவிட்ட மாய்மாலன்
குற்றமாய்ச் சொந்த எஜமான்மேல்
குத்திரமாகக் கோட் சொன்னவன்.

10. சம்பள மதிகந் தருந்தபடி
தரமனதென்று சாக்குரைத்தான்
உம்பளத்திருந்த வேலையினை
யுதவாப்படி செய்த சதிகாரன்.

11. கழுதை குதிரை வாகனத்தைக்
கண்டவுட னிச்சித்து மறைத்துவைத்தான்
பழுதைப் பெரியோ ரறியாமல்
பயந்தவன் போலிருந்த குடிகேடன்.

12. ஆடையாபரணங் கண்டவுட
ஹங்காரமாகப் பொருமையுற்று
கேடாகத் தானெடுக்கப் பேராசையாய்க்
கிருத்திரமஞ் செய்த அதக்கிரமன்

13. பொல்லாத நினைவுக ளெண்ணியிவன்
பொல்லாத யோசனைக ளாலோசித்தே
யெல்லரப் பொருளு மிச்சித்தின
மேங்கித்திரிந்த வீண்காலன்.

14. கற்பனை சிலதைக்கைக் கொண்டுமிக்
கற்பனை முற்று மீறிவிட்டான்
சற்பனையாக இச்சித்ததால் மிகச்
சஞ்சல வருத்தின கேடுகாலன்.

15. கற்பனை மற்றதைக் கைக்கொண்டுங்
கடைசிக் கற்பனையை முழுவதுமே
சற்பனையாக மீறிவிட்டு
சங்கடமா யிச்சித்தவன் கண்ணன்.

16. நியாயப் பிரமாணத்தை முழுவதுமே
நிருபித்தபடி கைக்கொண்டெவனு
மெயாக நடந்திலை மேசியாவே
மேதினியி னீதிமா னொருவனில்லை.

17. இந்த விதமாக இருபலகைகளி
லெழுதிய கற்பனையை முழுதாக
நிந்தையுற மீறினவனென்று மோசே
மைந்தனர் சமூகத்தில் வாசித்தானே.

18. பொல்லா பேர்களின் செபங்கேளீர்
பிடரியைக் கடினப் படுத்தினமா
வல்லாளரிவர்களை நரகத்திலே
வாட்டி வதைப்பதே நீதியென்றான்.

19. நீதி கெடாமற் றெண்டியுமையா
நெறிப்படி சாபத்தி னுக்கினையையே
சாதித்து மநுதிருத் தீர்மானஞ்
சாற்றமென்றான் றிக்குவாய் மோசேமுனி.

---

## விருத்தம்.

---

திட்டமொடு கட்டளைகள் பத்துமொழி சட்டவழி
கெட்டவனு துட்டநரரை
விட்டுநரகிட்டு துயர்முட்டவழ லொட்டவுரை
வித்தக கிறிஸ்துமகிபா
செட்டியிது திட்டையென வட்டமலை நெட்டைமுனி
கிட்டிமனு சொற்ற திடென
அட்டதிசை முட்டவலு சத்தமுற நட்டுநட்
டலறினர்களஞ் ஞானரே.

ஆக வகை 11-க்கு விருத்தத்தோடு 513.

## முத்தரித்த புஸ்தகத்தை தேய்வாட்டுக்குட்டி வாங்கின சுப செய்தி.

### விருத்தம்.

நியாயப் பிரமாண மோசே ஞாயமோ டெடுத்துச் சொன்ன
தீய குற்றச் சாட்டெல்லாந் தேவனுரேசு கேட்டங்
காயத் தீர்ப்புரைக்கு முன்னு றைிய நற்சுவிசேடத்தி
னேய முத்திரை யேழிட்ட நிருப பொஸ்தகங் கைக்கொண்
[டார். அறி. 5, 6.]

1. பரமா சனத்தி னடுவாக
பரிசுத்த மூப்பர்கட்குஞ் சீவன்கட்குஞ்
சரியாய் நடுவி லடிக்கப்பட்ட
சாதான செம்மறி குட்டியிருந்தார்.

2. வல்லபத்தா லுலகத்தி லெலாம்
வயங்கின எழு கொம்புகளும்
துல்லிப எழாவிகளு மிலங்
துலங்கும் பிரகாச எழுகண்களும்

3. நாலு சீவன்களு மார்பரித்தார்
நற்சுத்த வான்களின் செபங்களுமே
கோலமாய்த் தூபவர்க்க நேராகக்
கொண்டனரியாவரும் வணங்கினின்றார்.

4. பொத்தகத்தை வாங்கவு முத்திரைகளைப்
போக்க விரிக்கவுநீர் பாத்திரரே
எத்தேச காலமுழுமைப் போற்ற
எங்களைச் சகலவித கோத்திரத்தில்.

5. பாடையிற் சாதியிற் றெரிந்துகொண்டீர்
பராபரனுக் குமது செங்குருதியே
யீடாகச் செலுத்தித் தீர்ந்ததாலே
யிராசாக்க ளாசாரி யருமாக

6. இராசரீக மியற்றுவோ மெனும்புதிய
இன்ப ராகங்களைப் பாடினரா
லோசை யாய்ப் பதினுயிரங்களுக்கு
முயர்வாய்ப் பதினுயிரந் தூதர்.

7. ஆயிரங்களுக் காயிரமான
அருபர்கள் செம்மறிப் புருவைநிகர்
ரேயமா யடிக்கப் பட்டவரே
நித்திய பராக்கிரம ஞானத்தையும்.

8. கனத்தை மகிமையி ஸ்தோத்திரத்தையுங்
கதித்தை சுவரிய தனப்பெருக்கைத்
தினப் பெருக்காகக் கொள்ளுதற்கு
சிறந்தன றென்றவுடனு மென்றூர்.

அவிசுவாசிகள்.

9. பூமியி னரசர்கள் பெரியோர்கள்
பொங்கு செல்வத்தோர்கள் ேர்வையாக
ணே முகத் தலைவர்கள் பெலவான்கள்
நீசவடிமையர் தன் னிச்சையோர்.

10. பேதமாய் மோசேயை நம்பியிருந்தோர்
பெரிய பருப்பதங்கள் கெபிகளிலே
சேதம் வரவலிய ஒடியெமை
சீக்கிரமறையு மெங்கள் மேல்விழுந்து.

11. ஆசனத்தினடுவோ் மலர் முகத்துக்
காட்டுக்குட்டி யுக்கிர கோபத்துக்கும்
வீசியே மறையுங்கள் பெரிதான
வேதனைநாள் கிட்டிவந்து லெபித்ததென்றூர்.

12. குத்தினவர் நோக்கினர் திகிலாகக்
கோபமாய்ப் பேசினவர் பார்த்தார்கள்
புத்தி பிரசங்கம் வேண்டாமென்ற
பூலோகர் பிரமித்துப் பார்த்தார்கள்.

13. சத்திய வேதந் தழைத்தோங்க
தடைசெய்த துட்டருந் தலைகவிழ்ந்தார்
நித்திய காலங் கிறிஸ்தவர்க
ளிலைப்பரோ வென்றவர்கள் மலைத்தார்கள்.

14. சுவிசேடத் திரு வாக்கியத்தைத்
தூர எறிந்தவர்கள் குறுகுறுத்தார்
அவமாய்க் கிறிஸ்துவை நிந்தித்த
அனேக அஞ்ஞானர்களுந் திகிலானார்.

15. கூட்டோடே மோட்ச முங்களுக்குண்டே
கூடுகட்டி செப்பட்டை பறப்பீரோ
ஒட்டாரமாகச் சுவி சேஷத்தினு
லென்னவரு மென்றவரும் பார்த்தார்கள்.

16. பார்த்தார் கையை நெறித்தார்கள்
பதைபதைப் பாய்த்தங்கள் பற்கடித்தார்கள்
வேர்த்தார் சோப மிகவுற்றார்
மீளுதற்கினி இடமில்லை யென்றார்.

17. மோசேயின் பிரமா ணத்தினிகர்
முழுவது நடந்தோ ரொருத்தரில்லை
நாசரேத்தே சுவை நம்பினபேர்
நல்லவர்க ளீதியரு மாகினரே.

18. சத்திய வேதஞ் சுவிசேடஞ்
சாற்றுமெய்ப்போதகர் வீதியிலே
மெத்தனவாக இதை விரித்துச்சொல
வேண்டா மென்றேமே யெனவழுவார்.

## சாட்சிகள்.

19. அந்நேரஞ் சாட்சி பகர்ந்தார்கள்
அருமை யிஸ்நாநக யோவான் முனி
சொன்ன குமாரனைப் பற்றுதான்
சுத்தமாய்ச் சீவனைக் காண்பதில்லை.

20. யெவா னருளப்ப இஸ்நாநகனே
உறுதியி லுலகிற் சாட்சியிட்டார்
தாவாப் பிரமாண மோசேயினால்
தங்கிய கிருபை யுண்மையேசுவினால்.

21. உலகத் தாருக்கு தித்ததிவ
ருலகத்தின் பவத்தைச் சுமந்தெடுக்கும்
வலமைத் தேவா டெனவுறுதி
வாய்மையிற் பகர்ந்தேனென நவின்றான்.

22. தீர்க்கர்க ளனைவர்கூடி வந்தார்
திடத்துட னுலகிற் சாட்சியிட்ட
தீர்க்க மதனைத்து மொழிந்தார்கள்
தேவன் கிறிஸ்துவைப் பற்றுத.

23. கடினக் கழுத்துள பலரிவர்கள்
கடிதாக்கினைக்குப் பாத்திரரே
கொடியோரென்றார் விசுவாசர்
கூட்டமு மெதிராய்ச் சாட்சியிட்டார்.

24. கிறிஸ் ததிபதியை யுலகத்திலே
கிருபைபெருக விசுவாசியாமல்
மறுத்தவ ரனைவர் நரகத்திலே
வாட்டப்படுவதே நீதி யென்றார்.

25. ஞாய சபைகளு மூப்பர்களு
நடுவரை நோக்கி மன்றாடி
பேயை வணங்கின பேயரிவர்
பேயோடே நரக பாதாளத்திலே.

26. தள்ளப்படவே காலமென்றார்
சத்தமர் யிடிகள் குமுறல்களின்
விள்ளரிய சத்த மிகவாகி
வேதனார் திருவாக்குரை பகர்ந்தார்.
[ஆக வகை 12-க்கு விருத்தத்தொகை 541.]

## முடிவுரை.

### விருத்தம்.

முக்கிய பராக்கிரம சக்கரபதி நற்கிறிஸ்
துக்கிரமிகுக்கு மூர்க்க
விக்கிரக வக்கிரம மக்கள் கடியொக்கார
கக்கினி விழக்கடைத் தீர்ப்
பக்கணமுரைக்க வலபக்கமுறு மெய்க்கிறிஸ்து
துக்கடியர் புக்கமோட்ச
திக்குகண் முழக்கமிட வெக்களிப் பெக்காள
மிக்கவொலி லக்கமிலையே.

## குற்றஞ்சாட்டப் பிசாசுக்கதிகார மில்லை.

1. ஞாய பத்திராசனத்திற் கிறிஸ்தரச
னமே விட்டிருக்கையிலிட பக்கமாய்ப்
பேயை வணங்கினவர் நின்றார்களப்
பேயுங் கருகருத்துத் தூரநின்றது.

2. சீறிநின்ற பேயோ திக்குவாய்முனி
செப்பினதைக் கேட்டவுடன் பழையபடி
கூறிக் குற்றஞ்சாட்டுந் தன்மையாக
கோபமாய் விசுவாசிகளைப்பற்றி.

3. சித்திரக் குமரனார் கிறிஸ்திறையைச்
சேர்ந்தவர்கள் கணக்கென்னவென்று மொழிந்த
அத்தரண ஞாயசபையப் போஸ்தல
னரிய சின்னப்பர் பவுலெழுந்துரைத்தான்.

4. பராபரன் றெரிந்து கொண்டவர்களைப்
பங்கமாய்க் குற்றஞ் சுமத்துவனார்
சராசரி நீதி யராக்கிறவர்
தானான பரப்பொரு ளானவரே. (ரோம. 8 : 33-34.)

5. ஆக்கினைக் குளராய்த் தீர்ப்பவரார
ரிய கிறிஸ்துதான் மரித்தாரே
தீர்க்கமிக விதிலுங்காத் திரமாய்ச்
சிறந்துயிர்த் தெழுந்தார் திடனென்றான்.

6. பரமண்டலத்து தேவாலயத்தின்
பக்கத்தாசனத் திருந்தாயிற்றென
வொருபெருஞ் சத்தவொலி கேட்டதந்த
வொல்லையிற் கிறிஸ்தநிபன் தீர்ப்புரைத்தான்

---

## வலது பக்கத்தாருக்குரைத்த தீர்ப்பு.

---

7. மகிமை யினாசனத்தின் மன்னவனார்
வலபக்கத் துள்ளோரை நோக்கிச்சொல்வார்
தகையற வாருங்களென் பிதாவாற்
சந்ததமா சீர்வதிக்கப் பட்டோரே. (மத். 25 : 33 36.)

8. பூலோகத்தோற்றமு ளாதியாகப்
பூரிப்பா யுங்களுக்கென் றுயத்தப்பட்ட
மேலான ராச்சியத்தைச் சுதந்தரியு
மேதினியிற் பசியுற்றேன் பசிதீர்த்தீர்.

9. தாகமாயிருந்தேன் றகைதீர்த்தீர்
சார்ந்த பரதேசியெனைச் சேர்த்துக்கொண்டீ
ரேக நிருவாணமு மாயிருந்தே
னேற்ற வஸ்திரங் கொடுத்தாதரித்தீர்.

10. வியாதியிலிருந்தேன் பார்க்க வந்தீர்
காவலிலிருந்தேன் காணவந்தீர்
நியாயமிதென்று நித்தியர்சொல
நீதியர்கள் பணிவா யாண்டவரே.

11. எப்போது நீர் பசியாயிருந்தீ
ரெப்படிப் போஷித்தோந் தாகந்தீர்த்தோ
மெப்போது நீர் பரதேசியென
வேற்றுக் கொண்டாதரித்தோமப்பாரே.

12. எந்தச் சமையமையாகாவலிலு
மிடுங் கடுங்காவலிலும் பார்க்கவந்தோஞ்
சிந்தையுணர்த்து மென்றுரா சாவேர
திரு மொழியாக மெய்யாகவே.

13. உங்களுக் கறைகிறே னெல்லாரிலு
முறுஞ்சிறியோரான இந்த எனது
வங்கணச் சகோதரரி லொருதனக்கு
மனது வந்தீந்ததே யெனக்கென்பார்.

## இடது பக்கத்தாருக்கிட்ட ஆக்கினைதீர்ப்பு.

14. இடதுபக்க முள்ளோரைப் பார்த்துரைப்பா
ரென்னை விட்டு சபிக்கப்பட்டோரே
கடியபிசாசுக் கதின் றூதருக்குங்
காத்திரமா யாயத்தஞ் செய்யப்பட்ட. (மத். 25 : 41-43.)

15. நித்திய அக்கினியிலே போங்க
ணீடிப்பு வியிற் பசியாயிருந்தேன்
சித்தமாய்ப் போஷித் தீரிலேதாகந்
தீர்த்தீரிலேப் பரதேசியென்னை.

16. சேர்த்ததிலே யம்மணமா யிருந்தேன்
சிறு வஸ்திரமுங் கொடுத்தீரிலேயாற்
பார்த்தீ ரிலேயென்னை வியாதியிலும்
படுங்கொடுங்காவலிலு மெய்தி யென்பார்.

17. மறு மொழியாக அவர்களுமே
மன்னவரே யுமையா மெப்போ தெப்போ
துறுபசி தாக முற்றவரா
யொன்று மற்றபரதேசி யம்மணமாய்.

18. காய்ந்த வியாதியாற் காவலிலுங்
கண்டுமக்கெப் போதுதொண் டியற்ருதற்ரும்
ஆய்ந்த நிலேயாச்சரிய மென்பாருட
னறைகுவரதிபன் மெய்யாகவே.

19. சொல்லுகிறே னெல்லாரிற் சிறியெர்களிற்
றன்னு.மொருத்தனுக்குச் செய்யாதெதோ
அல்லலா யெனக்கதைச் செய்யாதுற்றீ
ராதலா லாக்கினைத் தீர்ப்புறுதியென்றார்.

## தீர்ப்பு நிறைவு.

20. சித்திரக் குமரனூர் தீர்ப்பின்படி
திகைத்திவர் நித்திய வேதனையி
லுத்தமத் தினீதியர் நித்தியசதா
வூழிகால சீவனிலே போயமைந்தார்
அண்டபரமெண்டிசை நன்றமைத்தோர் வெற்பி
லரியதிருமறை மோசேக் கருளிச்செய்து
விண்டபராபர னென்றுமென்றும் வாழி
மேவுதமது இரத்தால்வினை தீர்த்தெம்மைக்
கொண்டுபர மண்டலத்தில் வாழ்க வைத்த
குமரநவுரை பகருங் கிறிஸ்துவாழி
மண்டு விசுவாச மெழிற்சபையிலோங்க
வரமீயுமரூபியர் நீடூழிவாழி.

[ஆக வகை 13-க்கு விருத்தத்தோடு. 563.]

முற்றிற்று.